# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8+II

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் –02 | 15–03–2004 | திங்கட் கிழமை | ஓசை –026







# கருணா தனது முடிவை அறிவிக்கும் முன்பாக சந்திரிகாவுடன் தொடர்பை ஏற்படுத்தினார்!

## சண்டே லீடர் பத்திரிகை கூறுகிறது

(கொழும்பு)

**கடந்த மூன்றாம் திகதி கருணா தனது முடிவை அறிவிக்கும் முன்னதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைவரான சனாதிபதி சந்திரிகாவுடன் கருணா தொடர்பை ஏற்படுத்திக் கொண்டதாக சண்டேலீடர் பத்திரிகை தெரிவிக்கின்றது.**

கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம திகதி கருணா தனது புதிய நிலைப்பாட்டை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணித்தலைவர்களுடன் பகிர்ந்து கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் கருணாவுக்கும் இடையேயான தொடர்பாளராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கொழும்பு மாவட்ட வேட்பாளர் ரட்ணகமகே என்பவரே செயற்பட்டுவந்துள்ளார். இவர் கடந்த பெப்ரவரி மாதம் 19ஆம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தியர்கள் வேலைநிறுத்தத்தினால் யாழ். மருத்துவமனை செயலிழப்பு

(யாழ்ப்பாணம்)

வைத்தியர்கள் மேற்கொண்டுவரும் வேலைநிறுத்தம் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

வைத்தியர்களுக்கான சம்பள முரண்பாட்டை நீக்கக் கோரி கடந்த 11 ஆம் திகதிமுதல் நாடளாவிய ரீதியில் இடம்பெற்றுவரும் வைத்தியர்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ். போதனா வைத்தியசாலை ஊழியர்களும் போராட்டத்தில் குதித்துள்ளனர். இதனால் யாழ்.போதனா

(8ஆம் பக்கம் பார்க்க)

## "கருணா ஒரு துரோகி" மட்டு. ஆரையம்பதி சுவரொட்டி

(மட்டக்களப்பு)

மட்டு. ஆரையம்பதிப்பகுதியில் கருணாவுக்கு எதிரான சுவரொட்டிகள் நேற்று முன்தினம் காணப்பட்டன. ஆரையம்பதிச் சந்தைப்பகுதியில் பெரிய அளவிலான சுவரொட்டிகளில் "கருணா ஒரு துரோகி" என வாசகம் பொறிக்கப்பட்டிருந்தன. இரவிரவாக ஒட்டப்பட்ட இச் சுவரொட்டி நேற்று முன்தினம் பகல் 10 மணிவரை காணப்பட்டது. பின்னர் அப்பகுதிக்கு வந்த கருணாவின் அடியாட்கள் மக்களை மிரட்டியதுடன் சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்துள்ளனர்.

## ரணிலின் ஊழல் நிர்வாகம் காரணமாகவே மீண்டும் தேர்தலொன்றுக்குச் சென்றேன்

### சனாதிபதி சந்திரிகா கூறுகிறார்

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தின் ஊழல் மிகுந்த நிர்வாகம் காரணமாகவே தாம் மீண்டும் பொதுத் தேர்தல் ஒன்றுக்கு சென்றதாக சனாதிபதி கூறியுள்ளார்.

சனாதிபதி நேற்று இரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய நீண்ட உரையில் தெரிவித்தார்.

இதன் போது தமது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை ஆட்சியில் அமர்த்தி ஊழல்களைகளையுமாறும் சமாதானம்,நீதி சமத்துவம் என்பவற்றுக்கு இடமளிக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

தாம் ஒரு போதும் பொய்யான வாக்குறுதிகளை வழங்கியதில்லை எனக் குறிப்பிட்ட அவர், பிரதம மந்திரியின் மீண்டும் இலங்கையை கட்டியெழுப்புவோம் என்ற திட்டத்தை விமர்சித்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் விடுதலைப் புலிகள் என்ற ஆயுதக் குழுவை சக்திமயப்படுத்தி அவர்களின் ஆட்பலத்தை மூன்று மடங்காக அதிகரித்தது.

போர்நிறுத்த உடன்பாட்டின் கீழ் மிகவும் சக்தி வாய்ந்த ஒலிபரப்பு சாதனங்களை தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் பெற்றுக் கொடுத்திருந்தது. இவ்வாறானநிலையில் பின்னரே விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுக்களில் இருந்து விலகுவதாக

(8ஆம் பக்கம் பார்க்க)

## சக அதிகாரியைச் சுட்டுக்கொன்ற இராணுவச் சிப்பாய் தலைமறைவு

### யாழ். ஆஸ்பத்திரி வீதியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் இராணுவ அதிகாரி ஒருவரை சுட்டுக் கொன்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் தலைமறைவாகியுள்ளார்.

நேற்று அதிகாலை யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அநுராதபுரத்தைச்சேர்ந்த கப்டன் விஜித பண்டார (வயது-24) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, ஆஸ்பத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் ஒரு யுத்தத்திற்கு ஐ. தே. கட்சி தயாரில்லை

### வவுனியாவில் ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

(வவுனியா)

மீண்டும் ஒரு யுத்தத்திற்கு செல்ல ஐக்கிய தேசியக் கட்சி தயாராகஇல்லை. என இனப்பிரச்சினையை சுமுகமாக தீர்க்காததன் காரணமாகவே இது வரை 60000 ற்கும் மேற்பட்ட உயிர்கள் பலியாகியுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார் . நேற்று வவுனியா நகரசபை திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் சிறிலங்காப்பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் இன்றை சமாதான முனைப்பில் தமிழீழ விடுதலைப்புலிகளும் அரசும் மட்டுமே சம்பந்தப்பட்டிருக்கவில்லை. 51 நாடுகளும் 22 உதவி வழங்கும் நிறுவனங்களும் இந்த சமாதான முனைப்பினை ஏற்றுக்கொண்டுள்ளன. இந்த நாடுகளும் நிறுவனங்களும் இலங்கையை பிழையான வழிக்கு இட்டுச்செல்லப்போவதில்லை. இதேவேளை மீண்டும் யுத்தத்தினை முன்கொண்டு செல்லும் முயற்சியை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மேற்கொண்டுள்ளதாக கூறிய பிரதம மந்திரி இராணுவமாக இருந்தால் என்ன, தமிழீழ விடுதலைப் புலிகளாக இருந்தால் என்ன இரண்டு தரப்பிலும் யுத்தத்தில் ஈடுபட்டவர்கள். சாதாரண இளைஞர்களே எனவும் குறிப்பிட்டார்.

இந்தக் கூட்டத்தின் பின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மலேசியாவுக்கான இல.தூதுவர் ஐ.தே.க.பிரச்சாரக் கூட்டத்தில்

### சனாதிபதி சந்திரிகா குற்றச்சாட்டு

(கொழும்பு)

மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் றோசி சேனாநாயக்க விசேட விடுமுறையில் இலங்கை வந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாக சனாதிபதி சந்திரிகா குற்றம் சுமத்தியுள்ளார். இது தொடர்பில் சனாதிபதி வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்னாண்டோவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். றோசி சேனாநாயக்க இவ்வாறு தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவது இராஜ தந்திர நடவடிக்கையை மீறும் செயல் ஆகும் என குறிப்பிட்ட சனா

(8ஆம் பக்கம் பார்க்க)

## இரு நாட்டுப் பற்றாளர்கள் வீதி விபத்தில் சாவடைந்தனர்

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வீதி விபத்தொன்றின் போது நாட்டுப்பற்றாளர்கள் இருவர் சாவடைந்துள்ளனர்.

கந்தசாமி ஈஸ்வரச்சந்திரன் (அரசடி வீதி, வண்ணார் பண்ணை யாழ்ப்பாணம், த.மு: அலையோசை கராடிப்போக்குச் சந்தி, கிளிநொச்சி)

பொன்னையா சிறிதரன் (நாவற்குழி, யாழ்ப்பாணம், த.மு: ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு).

ஆகிய இரு நாட்டுப் பற்றாளர்களே சாவடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## 426 வன்முறைகள் நேற்று வரை

(கொழும்பு)

காலை முடிவடைந்த 24 மணித்தியாலங்களில் 33 தேர்தல் வன்முறைகள் நடைபெற்றுள்ளன. இதில் 14 முறைப்பாட்டை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், 7 முறைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியும், 2 முறைப்பாட்டை மக்கள் விடுதலை முன்னணியும் செய்துள்ளன. ஏனைய முறைப்பாட்டை மற்ற கட்சி

(8ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் உரை தொடர்பாக ஐக்கிய தேசிய கட்சி கடும் கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா நேற்று ஊடகங்களுடாக நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் செனரல் கப்புக்கொட்டுவ கண்டனம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தலைவியான சனாதிபதி தேர்தல் நடைபெறும் சூழ்நிலையில் கட்சி ஒன்றுக்கு வாக்களிக்குமாறு நாட்டு மக்களிடம் கோரிக்கை விடுவது மிகவும் மோசமான செயற்பாடு என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசுத்தலைவர் ஒருவருக்கு இருக்கும் அதிகாரங்களை பயன்படுத்தி நாட்டுமக்களுக்கு

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### வேந்தன் பல்கட்டும் நிலையம் கிளிநொச்சி

பல்கட்டுதல், மிதப்பு பற்களுக்கு கிளிப் போடுதல் என்பவற்றை சிறந்த முறையில் செய்துகொள்ள மத்திய கல்லூரி மைதானம் முன்பாக வேந்தன் பல்கட்டும் நிலையம், யாழ். கண்டி சாலை, ஆனந்தபுரம். (சி.9319)

### தவறிவிட்டது

நேற்று (14-03-2004) அன்று ப்ளைக்கும் ஆனையிறவுக்குமிடையே A-9 வீதியில் NPHD 8290 இலக்கமுடைய உந்துருளியின் புத்தகம் அடங்கிய ஆவணங்கள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் கிளிநொச்சி பணிமனையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (3548)

### எட்வின் கல்வி நிலையம் முல்லை வீதி, புதுக்குடியிருப்பு

புதிய வகுப்புக்கள் ஆரம்பம். காலம்: 20-03-2004 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு. G.A.Q., A.A.T. Stage I, A/L 2005,2006 கலை, வர்த்தக, விஞ்ஞானப் பிரிவுகள். 9,10,11ஆம் ஆண்டுக்கான வகுப்புக்கள், 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் வகுப்பு. உங்கள் பதிவுகளை 19-03-2004 ஆம் திகதிக்கு முன் எமது கல்வி நிலையத்தில் பதிவு செய்து கொள்ளவும். நிர்வாகம். (4057)

# த.பு.கழகப் பணியாளர்களுக்கு வீதிப் போக்குவரத்து குறித்து விளக்கம்

## காவல்துறையினர் வழங்கினர்

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் புனர்வாழ்வுக் கழக பணியாளர்களுக்கு வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறைகள் தொடர்பாக தமிழீழ காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் விளக்கமளித்துள்ளனர்.

நேற்று முன்தினம் தமிழர் புனர்வாழ்வுக்கழக நிதிப்பிரிவு செயலகத்தில் காலை பத்து மணிக்கு புனர்வாழ்வுக்கழக வாகன சாரதிகள் மற்றும் உந்துருளி ஓட்டுநர்கள் என பெருமளவானோர் இதில் கலந்து கொண்டனர். மேற்படி வாகன ஓட்டுநர்களுக்கு வீதி ஒழுங்கு முறைகள் தொடர்பாகவும், சைகைகள் தொடர்பாகவும் வாகனங்களில் பயணிக்கின்ற வழிமுறைகள் தொடர்பாகவும் பூரண விளக்கமளிக்கப்பட்டதுடன் வீதி ஒழுங்கு முறைகளுக்கமைவாக பயணித்து விபத்துக்களைத் தவிர்க்க உதவ வேண்டும் எனவும் காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த மனோகரன் வேண்டுகோள் விடுத்தார். (லோ)

# பாடசாலைகளில் ஈ.பி.டி.பி.யினர் பிரச்சாரம் பல்கலை மாணவர் கடும் கண்டனம்

## தேர்தல் சட்டவிதிகளை மீறும்செயல்!

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி.யினர் பாடசாலைகளுக்குள் அத்துமீறி நுழைந்து மேற்கொண்டுவரும் கருத்துத்திணிப்பு நடவடிக்கைகள் குறித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

யாழ். வாழ்மக்களின் அரசியல் அபிலாசைகளுக்குப் புறம்பாக எதிர்வரும் தேர்தலில் ஈ.பி.டி.பி. யினரின் பிரச்சாரக்கருத்துக்களை மக்களும், மாணவர்சமூகமும் தொடர்ந்தும் புறக்கணிப்புச் செய்து வருகின்றனர். இதனால் யாழ்ப்பாணத்தில் உள்ள பாடசாலைகள்தோறும் சென்று தமது பிரச்சாரக்கருத்துக்களை செவிமடுக்குமாறு மாணவர்களை வற்புறுத்தி வருகின்றனர்.

படையினரது பாதுகாப்புடன் ஈ.பி.டி.பி.யினர் மேற்கொண்டு வரும் இந்த நடவடிக்கை மாணவர்களின் மனநிலையைக் கடுமையாகப் பாதிப்பதுடன் தேர்தல் சட்டவிதிகளை மீறும் செயலாகவே இது அமைகிறது என்பதைச் சுட்டிக்காட்டியே இக் கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது. (33)

# கணினிப் பயிற்சியில் தேறிய மாணவருக்கு சான்றிதழ்

ரெக் சுவிஸ் பணியகத்தின் அனுசரணையுடன் முல்லை பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப் படுத்தப்பட்ட கணினிப் பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன் தினம் நடைபெற்றது.

மெடோ நிறுவனத்தின் செயலாளர் றெஜினா தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை முல்லை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி, வவுனியா மாவட்ட தேர்தல் வேட்பாளர் ச. கனகரட்ணம் ஆகியோர் ஏற்றி வைக்க, தமிழீழத் தேசியக் கொடியினை முள்ளியவளைப் பிரதேசப் பொறுப்பாளர் இ. சரவணன் ஏற்றிவைத்தார். நிறுவனக் கொடியினை ரெக் நிறுவனத்தைச் சேர்ந்த தேவா ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையினை செல்வி பு. ராஜினி வழங்கினார். ஆசியுரையினை சீ.சீ. பாடசாலை அதிபர் நிகழ்த்தினார். சிறப்புரைகளை முல்லை மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு, கெயார் எக்கோ திட்ட இணைப்பாளர் கணேசலிங்கம், முல்லைத்தீவு சமாதான நீதவான் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

கணினிப் பயிற்சியில் தேறிய மாணவர்களுக்கான சான்றிதழ்களை முல்லை மா. மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்நிலவு, த.பொ. மே. நி. முல்லை மாவட்டப் பொறுப்பாளர் செல்வி கீ. நர்மதா, முள்ளியவளை பி. அ. துறைப் பொறுப்பாளர் சரவணன், மு.மா. மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி, தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்டப் பணிப்பாளர் ஜெயராஜசிங்கம், முல்லை சமாதான நீதவான், கெயார் திட்ட இணைப்பாளர் கணேசலிங்கம், வவுனியா மாவட்ட வேட்பாளர் திரு. ச. கனகரத்தினம், ரெக் நிறுவனத்தைச் சேர்ந்த தேவா, ரெக் நிறுவன நிர்வாக அலுவலர் தமிழ்வாணி, சீ.சீ. பாடசாலை அதிபர் ஆகியோர் வழங்கி கௌரவித்தனர். (20)

# கண்டாவளைப் பிரதேச கழக பெரு விளையாட்டு விழா

கண்டாவளைப் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே வருடாந்தம் நடத்தப்படும் விளையாட்டு நடைபெற்று இறுதிநாள் பெரு விளையாட்டு விழா பரந்தன் இளைஞர் வட்ட மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிரதேச செயலர் சீ.சிவ்சொருபநாத பிள்ளை தலைமையில் நடைபெற்றது. தருமபுரம் ம.வி. மாணவிகளின் பாண்ட் வாத்திய இசையுடன் விழா விருந்தினர்கள் மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து மங்கல விளக்கை கிளி/அரச அதிபர் தி.இராசநாயகம், மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளர் பி.கா.மத்தியாஸ் ஆகியோர் ஏற்றினர். தமிழீழ தேசியக் கொடியை பரந்தன்கோட்டப் பொறுப்பாளர் பரந்தாமன் ஏற்றி வைத்தார். தொடர்ந்து மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளரின் ஆசியுரையுடன் போட்டி நிகழ்வுகள் ஆரம்பமானது.

விளையாட்டு நிகழ்வின் இறுதியில் நடைபெற்று முடிந்த பெறுபேறின் முடிவில் பரந்தன் இளைஞர் வட்டத்தினர் 211 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும், முரசுமோட்டை விளைபூமி விளையாட்டுக் கழகம் 70 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், கலவெட்டி திடல் கண்ணகை அம்மன் விளையாட்டுக்கழகம் 56 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றன. இறுதியாக வெற்றியீட்டிய விளையாட்டுக் கழகங்களுக்கு சான்றிதழ்களும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கிளி/மாவட்ட செஞ்சிலுவைச் சங்க இடம்பெயர் சேவை முதலுதவி சேவையை டாக்டர் கே.வி. கே.திருலோகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.(14)


## கிளி. நகரில் S.J.S லேணஸ்



எதிர்வரும் 22.03.2004 திங்கள் தொடக்கம் கிளி நகரில் சகல வாகனங்களுக்கும் முழு பயிற்சியளிக்கப்படும். அரச சாரதி அனுமதிப்பத்திரம் ஒரு மாதத்தில் பெற்றுத்தரப்படும்.

தொடர்புகளுக்கு:- S.J.S லேணஸ்
பிரதான வீதி,
ஆனந்தபுரம்,
கிளிநொச்சி.

குறிப்பு:- ஆயப்பகுதி நடுவப்பணிமனை முன்பாக

நிர்வாகம்
S.J.S லேணஸ்.

(4312)


### வெளி நோயாளர் பிரிவில் 2650 பேர் சிகிச்சை

(கிளிநொச்சி)

அக்கராயன் அரசினர் வைத்தியசாலையில் சென்ற மாதம் வெளிநோயாளர் பிரிவில் 2650 பேர் சிகிச்சை பெற்றுள்ளனர்.

சாதாரண காய்ச்சல் காரணமாக 420 பேரும்,மலேரியாவிற்கு 46 பேரும்,கிருமித் தொற்றுகளால் ஏற்பட்ட நோய்களிற்கு 92 பேரும், வாந்திபேதிக்கு 67பேரும, விசர்நாய் கடிக்கான சிகிச்சையினை 8பேரும், விபத்துக்காயங்களிற்கு 260 பேரும் சென்ற மாதம் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர். அக்கராயன் வைத்தியசாலையில் மாதத்தின் 1வது ஞாயிறும் 3வது ஞாயிறும் கிளினிக் சிகிச்சையினையும் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

### அறுவடை விழா

(உடையார்கட்டு)

உடையார்கட்டு பிரதேச இயந்திர அறுவடைவிழா கடந்த 11ம் திகதி உடையார்கட்டு, விசுவமடு பிரதேச விவசாயப் போதனாசிரியர் த.கமலதீபன், விசுவமடுப் பிரதேச பொருண்மிய மேம்பாட்டு இணைப்பாளர் றொபேட் ஆகியோரால் இணைந்து நிகழ்த்தப்பட்டது. இதில் உடையார்கட்டு பகுதி கிராம அலுவலர்கள், கமக்கார அமைப்பு பிரதிநிதிகள்,விவசாயிகள் என பலதரப்பட்டோர் கலந்துகொண்டு அறுவடை விழாவை சிறப்பித்தனர். (19)

## சாவு அறிவித்தல்

### அந்தோனிப்பிள்ளை அல்பிரட் [ராசு]

### இரணைப்பாலை

முல்லைத்தீவு-இரணைப்பாலையைச் சேர்ந்த திரு.அந்தோனிப்பிள்ளை அல்பிரட் (ராசு) (முன்னாள இலங்கைப் போக்குவரத்துச்சபை சாரதி) நேற்றுமுன்தினம் (13.03.2004) அன்று காலமாகிவிட்டார்.

இவர் சறோசாவின் அன்புக்கணவரும் காலஞ் சென்ற திரு.அந்தோனிப்பிள்ளை, திருமதி அஞ்சலீனம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ் சென்ற கபிரியேல் பிள்ளை, திரேசம்மா ஆகியோரின் மருமகனும், காலஞ் சென்ற செலஸ்ரீன், மனுவேற்பிள்ளை (துரைமணி) யோசேப்பு (ஐயா), கில்பேட், இருதயநாயகி (லீலா) (லண்டன்) அல்போன்ஸ் (ஜேர்மனி), அருட்தந்தை அகஸ்ரீன் (வட்டக்கச்சிப் பங்குத்தந்தை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் இன்றுமாலை 4.00 மணிக்கு இரணைப்பாலை பற்றிமா அன்னை ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு அங்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதும் இரணைப்பாலை பற்றிமா அன்னைஆலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருட்தந்தைஅகஸ்ரீன்
பங்குத்தந்தை,வட்டக்கச்சி.

(சி-9334)

## வீரவணக்கம்



பிறப்பு 22 - 07 - 1935

இறப்பு 13 - 03 - 2004

நாட்டுப்பற்றாளர்

### கந்தசாமி ஈஸ்வரச்சந்திரன்

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்

*உள்ளத்தில் மாசற்றவனாய்– எம்*
*உயர்வுக்கு வழிகாட்டி*
*மின்னலென மறைந்தாலும்– எம்*
*மனங்களிலே நிலைத்திருப்பீர்.*

*அலை ஓசை தொழில் நுட்பவியலகம்,*
*கரடிப்போக்கு,*
*கிளிநொச்சி.*

(3550)

## வீரவணக்கம்



பிறப்பு 22 - 07 - 1935

இறப்பு 13 - 03 - 2004

நாட்டுப்பற்றாளர்

### கந்தசாமி ஈஸ்வரச்சந்திரன்

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

அன்பு மொழி பேசி
ஆங்கிலத்தை ஊட்டி
கணப்பொழுதில் எமைப்பிரிந்த
ஆசானே...
உம் நினைவுடன்...

இவருடன் சாவடைந்த பொன்னையா கிரிதரன் அவர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*பொறுப்பாளர், பணியாளர்கள்,*
*தென்றல் நிறுவனம், புதுக்குடியிருப்பு.*

(3549)

# இந்தியா, பாகிஸ்தான் படைக் குறைப்பு தெற்காசியாவில் அமைதிக்கு வழிவகுக்கும்

**சனாதிபதி பர்வேஷ்முஷாரப் ஆலோசனை**




(இஸ்லாமாபாத்)

**தெற்காசியாவில் அமைதியை நிலை நாட்ட பாகிஸ்தானும், இந்தியாவும் கூட்டாக ஆயுதப்படைகளைக் குறைக்க வேண்டுமென பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப் தெரிவித்துள்ளார்.**

அவர் பாகிஸ்தான் தலைநகரில் இருந்து செய்மதி தொலைக்காட்சி மூலம் விடுத்த உரை ஒன்றில் பாகிஸ்தான் ஆயுதப்போட்டியில் ஈடுபடவில்லை என்று தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய ஆயுதங்களின் சக்தி அதிகரித்ததோடு ஏற்கனவே பாகிஸ்தான் இராணுவத்தின் தொகை ஐம்பதாயிரத்தினால் குறைந்து வருவதாகவும் முஷாரப் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தியா பாதுகாப்பிற்கென தமக்குத் தேவையான தொகையிலும் பார்க்கக் கூடுதலான ஆயுதங்களையும் இராணுவதொழில் நுட்பத்தையும் பெற்று தாக்குதல் தந்திரங்களில் ஈடுபட்டு வருகின்றது எனவும் அவர் தெரிவத்துள்ளார். ஆயினும் பாகிஸ்தான் ஆயுதக் குறைப்பை ஆதரித்து வருகின்ற தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



கராச்சி தேசிய விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தின்போது பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள பாகிஸ்தான் சிப்பாய்.

# மேற்கு நாடுகளுக்கு எதிராக போராட இஸ்லாமிய சமூகத்திற்கு ஒசாமா அழைப்பு!

ஒசாமா பின்லேடன் இஸ்லாமிய இணையத்தளம் ஒன்றினூடாக இஸ்லாமிய மதகுருமாரும், தலைவர்களும் அணிதிரண்டு மேற்கு நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் மக்களைப் போராடத் தூண்ட வேண்டும் என்று கோரியுள்ளார்.

பின்லேடனின் இந்த உரையின் சில பகுதிகள் அண்மையில் அல்.ஜஸீரா தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டுள்ளது.

அவர் தனது உரையில் மத குருமாரும், தலைவர்களும் அமைப்பு ஒன்றை அமைத்து முஸ்லிம் போராளிகள் இலகு ஆயுதங்களையும்,குண்டுகளையும் ஏவக் கூடிய ஏவுகணைகளையும், தாங்கி எதிர்ப்புக் கண்ணி வெடிகளையும் பெற்றுக் கொள்ள உதவ வேண்டும் என்றும் இந்த உரையில் கோரப்பட்டுள்ளது.



பொஸ்னியாவின் கிழக்கு நகரமான பிராட்டுனக்கில் முக்கிய யுத்தக் குற்றவாளி எனக் கூறப்படும் ரடோவன் கராட்சிக்கை பிடிக்கவென பெருமெடுப்பிலான தேடுதல் நடவடிக்கை நேற்று முன்தினம் இடம் பெற்ற போது இரு பொஸ்னிய சேபிய பொலிசார் காவல் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

# கலிபோர்னியாவில் கோரப்படுகொலை சடலங்களுடன் சவப்பெட்டிகளும் மீட்பு!

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தில் வீடொன்றிலிருந்து ஒன்பது பேரின் சடலங்களைப் பொலிசார் கண்டெடுத்துள்ளனர்.

மேற்படி உடல்கள் கிடந்த வீட்டினுள் உடல்களுக்கு அருகில் பத்துப்பிரேதப் பெட்டிகளும் கிடந்ததாக அமெரிக்கப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

குழந்தை ஒன்றை தமது பாதுகாப்பில் எடுத்துக் கொள்வது தொடர்பாக ஒரு குடும்பத்தினர் மத்தியில் ஏற்பட்ட சச்சரவே இந்த மரணங்களுக்குக் காரணம் எனப்பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இறந்தவர்களில் அனேகமானவர்கள் சிறுவர்களாவர். இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக மேற்படி இறந்த சிறுவர்களின் தந்தையென நம்பப்படும் 57 வயது நபர் ஒருவர்கைது செய்யப்பட்டுள்ளார்.

# இராணுவ நடவடிக்கைகளில் மனித வலுவை குறைக்க அமெரிக்கா தீவிர பரிசோதனை!

(வாஷிங்டன்)

அமெரிக்கா எதிர்வரும் யுத்த நடவடிக்கைகளில் இராணுவ வீரர்களைப் பயன்படுத்தாமல் றோபோ மனிதனையும் றோபோ வாகனங்களையும் உபயோகிப்பதற்கான பரிசோதனைகளை அமெரிக்காவின் கலிபோர்னிய மாநிலத்தில் நடத்தியுள்ளது.

முதல் நடவடிக்கையா றோபோபிக்கப் வாகனங்கள் கவச வாகனங்கள் என்பன கலிபோனியாவில் இருந்து 200கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள றொவாடாவரை செல்வதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தது.

ஆனால் பதினொரு கிலோமீற்றர் தூரத்திற்கு மேல் இந்தறோபோ வாகனங்களினால் பிரயாணம் செய்ய முடியவில்லையென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசோதனையில் பதினைந்து வாகனங்கள் பங்குபற்றத் தகுதிபெற்றிருந்த போதிலும் இறுதி நேரத்தில் இரண்டு வாகனங்கள் வாபஸ் பெறப்பட்டன.

அதிலும் ஒன்பது றோபோ வாகனங்களினால் மூன்று கிலோ மீற்றருக்கு மேல் செல்ல முடியவில்லை.

இதுபற்றி திட்டமுகாமையாளர் கருத்து வெளியிடுகையில் பிரயாணத்திற்காகத் தெரிவுசெய்யப்பட்ட வீதிகள் சிறந்த முறையில் அமைக்கப்படவில்லை என்று தெரிவித்துள்ளார்.

# அமெரிக்கப் படை உயர்அதிகாரி கெயிட்டி பயணம் தலைநகரருகே அமெரிக்கப் படைமீது தாக்குதல்!

**-மோதலில் இருவர் பலி; 11பேர் காயம்**

அமெரிக்க கூட்டுப்படைத் தலைமையகத்தின் அதிகாரி ஜெனரல் றிச்சேட் மயேஸ் நேற்றுக் காலை கெயிட்டிக்குச் சென்றுள்ளார்.

இலத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள ஜெனரல்றிச்சேட் மயேஸ் கெயிட்டியில் பணிபுரியும் அமெரிக்கக் கடற்படையினரை சந்திக்கவுள்ளார்.

இவர் கெயிட்டி போய்ச் சேர்ந்ததும் தீவிரபாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த விமான நிலையத்தில் இருந்து நாட்டின் மற்றுமொரு பகுதிகளில் உள்ள அமெரிக்கக் கடற்படை வீரர்கள் தங்கி உள்ள இடத்திற்கு உலங்குவானூர்தி மூலம் அழைத்துச் செல்லப்பட்டார்.

இதேவேளை அண்மையில் பதவிவிலக்கப்பட்ட அரிஸ்டைட் அயல்நாடான அமெரிக்காவிற்கு விஜயமொன்றை மேற்கொள்ள இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க கெயிட்டியின் தலைநகர எல்லைப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக் கித்தாக்குதலில் அமெரிக்கக் கடற்படையினர் இரண்டு துப்பாக்கி நபர்களை சுட்டுக்கொண்டுள்ளார்கள்.

அரிஸ்டைட்டின் ஆதரவாளர்கள் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்தே இந்த துப்பாக்கித் தாக்குதல் நிகழ்ந்துள்ளது. இதன்போது மேலும் பதினொருபேர் காயமடைந்துள்ளனர்.

பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி கெயிட்டிக்கு அமெரிக்கக் கடற்படையினர் போய்ச் சேர்ந்த பின்னர் மொத்தம் இரண்டாயிரத்து ஐந்நூற்றி ஐம்பது பல்தேசிய வீரர்கள் அங்கு கடமையாற்றி வருகின்றனர்.



ஈராக்கில் புதிதாக கையெழுத்திடப்பட்ட இடைக்கால அரசியலமைப்புக்கு எதிராக ஈராக்கிலுள்ள கில்லா நகரத்தில் மாணவர்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஸ்பெயினில் கூட்டாக நடந்த 40 பேரின் இறுதிக்கிரியை

**தற்கொலைத் தாக்குதல் காரணமல்ல!**

ஸ்பெயினின் தலைநகரான மற்றிட்டில் கடந்த 'வியாழக்கிழமை பதினோராம் திகதி நடைபெற்ற குண்டு வெடிப்புசம்பவத்தில் கொல்லப்பட்ட 200பேரில் 40 பேர்வரை பலிகொடுத்த நகரமான அல்கலா நெகிளஸ் என்ற இடத்தில் ஒரே சமயத்தில் நாற்பது பேரின் இறுதிநிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

இந்நிகழ்வில் மரணமானவர்களின் உடல்கள் வைக்கப்பட்ட பேழைகள்மீது றோஜாமலர்களை வைத்து உறவினர்கள் அஞ்சலி செலுத்தினர். இந்த இறுதிச்சடங்குகளை நடத்தி வைத்த பாதிரியார் இந்த மனிதக் கொலைகளுக்கு எந்த வகையிலும் நியாயம் கற்பிக்க முடியாது எனக் கூறியுள்ளதுடன் இந்தச் சம்பவத்தை நடத்தியவர்கள் எவராக இருந்தாலும் அவர்கள் மனித நேயத்தைத் தொலைத்தவர்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை இச்சம்பவம் தொடர்பாக நிபுணர்களின் ஆராட்சிகளின்படி இத்தாக்குதலில் தற்கொலைக் குண்டு தாரிகள் சம்பந்தப்பட்டதற்கான தடயங்கள் எதுவும் கிடைக்கவில்லை எனவும் தெரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த மற்றிக்குண்டு வெடிப்புத் தொடர்பாக ஐந்துபேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் இவர்களில் இரண்டுபேர் இந்தியர்கள் எனவும் மற்றைய மூன்றுபேரும் மொறொக்கோவைச்சேர்ந்தவர்கள் எனவும் செய்திகள் தெரிவக்கின்றன.

# உதைபந்தாட்டம் மோதலில் நிறைவு! கென்யாவில் 14 பேர் பலி!

கென்யாவின் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உதைபந்தாட்டப் போட்டியில் ஏற்பட்ட மோதலின் போதும் அதனையடுத்து இடம்பெற்ற கலவரங்களிலும் பதின்நான்குபேர் கொல்லப்பட்டுள்ளனர்.

உதைபந்தாட்டப் போட்டியில் ஏற்பட்ட மோதலை அடுத்து நடந்த இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்களில் மூன்றுபேர் சிறுவர்களாவர்.

இதேவேளை இக் கலவரங்களினால் ஏற்பட்ட சனநெரிச்சலில் சிக்கி சுமார் நாற்பது பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**-இந்திய-பாகிஸ்தானிடையிலான-**

# கிரிக்கெட் போட்டியைக்காண வாஜ்பாய் லாகூர் செல்லலாம்!

(புதுடில்லி)

இந்தியா-பாகிஸ்தான் அணிகள் விளையாடும் கரிக்கெட் போட்டிகளில் ஒருநாள் போட்டியைப் பார்த்து ரசிக்க இந்தியப் பிரதமர் வாஜ்பாய் லாகூர் செல்லக்கூடும் என துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி தெரிவித்துள்ளார்.

இதனால் இந்தியா பாகிஸ்தானிடையே உறவுகளை மேம்படுத்துவதற்கான மற்றுமொரு நடவடிக்கையாக அமையும் என்று துணைப் பிரதமர் அத்வானி கூறியுள்ளார்

அத்துடன் கராச்சியில் நடைபெற்ற ஒருநாள் போட்டி அமைதியான முறையில் நடந்திருப்பதும் இருநாட்டு உறவுகளுக்கும் நல்ல எடுத்துக் காட்டு என்று கூறியுள்ளார்.

# என்ன விலை கொடுத்தாகிலும் பதவி இதுவே ரணில்,சந்திரிகாவின் தாரக மந்திரம்



நாட்டில் தேர்தல் நடக்கும் பொழுதுதான் அது என்ன மாற்றங்களைக் கொண்டு வரப்போகின்றது என்ற கேள்வி எழுகின்றது.இந்த நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கப்போகும் இரு தலைமைப்பீடங்களின் தன்னிச்சை நடவடிக்கைகளால் நாட்டில் அரசியல் சரித்திரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தப் போகின்றன. எவ்வளவு விலை கொடுத்தாவது இந்த நாட்டின் தலைமைப் பதவியைத் தான் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பது சந்திரிகாவின் திட்டமாகும். அதேபோல் சந்திரிகாவை தலைமைப்பதவியிலிருந்து அகற்றி தான் நாட்டில் சனாதிபதிக் கதிரையில் அமர்வதற்கு என்னவிலை கொடுத்தாவது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டும் என்பது பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவின் திட்டமாகும். சனாதிபதி அவர்கள் திடீரென மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்று இனிமேல் இந்தநாட்டில் பிரதமரின் அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டுமானால் அதேபோல் எனது அதிகாரத்தையும் தக்க வைத்துக்கொள்ளுவதற்கு என்னுடன் ஒன்றுபட்டு இணைந்து செயற்பட வேண்டும் என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன் என்ற சைகையை காட்டியுள்ளார்.

இது சம்பந்தமாக எதிர்காலத்தில் தன்னுடன் இணைந்து செயற்படவேண்டும் என பலமுறை கலந்தாலோசனை செய்தும் பிரதமர் உடன்பாட்டுக்கு வராதபடியால் ஜே.வி.பி.யுடன் உடன்படிக்கையை செய்து கொண்டு பாராளுமன்றத்தைக் கலைத்தார். சனாதிபதியுடன் ஜே.வி.பி.யினர் கூட்டு ஒப்பந்தம் செய்துகொண்டது. சனாதிபதியின் நன்மைக்காக அல்ல. சனாதிபதியுடன் இணைந்து சுதந்திரக்கட்சியை இல்லாதொழிக்க வேண்டும். நாட்டைப் பற்றி எமக்கு கவலைகள் கிடையாது. இதுவே ஜே.வி.பியின் அரசியல் வியூகமாகும்.

சனாதிபதி பதவி இருமுறைகள் சந்திரிகா நாட்டினை ஏற்றபின் தனது காலம் முடிவடையும் பொழுதுதனக்கு ஏற்படப்போகும் கதியை மனதில் கொண்டே இந்த கூட்டினை ஏற்படுத்திக்கொண்டார். இந்த யாப்பை தயாரித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்கள் இரண்டாம் தடவை சனாதிபதி தேர்தலில் போட்டியிடும்பொழுது இரண்டாவது தடவை தனது பதவியை நீடிப்பதற்கு முறையான நாட்களை குறிப்பிடுவதில் தவறிவிட்டார். ஆனால் சந்திரிகா இதில் வெற்றி கண்டுவிட்டார்.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா முதலாவது சனாதிபதியாக 1978ஆம் ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இரண்டாவதாக சனாதிபதி சத்தியப்பிரமாணத்தை 1983ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதிக்கு செய்வதற்குப் பதிலாக 1984ஆம் ஆண்டு பெப்ரவரி 4ஆம் திகதி யில் சத்தியப்பிரமா ணம் செய் தால் 12 வருடகாலங்கள் நாட்டில் ஆட்சி செய்வதற்கு அவருக்கு சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் அதை அவர் நீடிப்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ள வில்லை. ஆகவே இந்த நாட்டில் பத்து வருடகாலம் மட்டும் சனாதிபதி பதவியில் இருந்தார்.

ஆனால் .சந்திரிகா அவர்கள் சனாதிபதியாக 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். பின் 1999ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் சனாதிபதித் தேர்தலை நடத்தாமல் அந்தவருடம் ஒக்டோபர் மாதம் நடத்தினால் இரண்டாவது முறை 1999ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி சனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

2000ஆம் ஆண்டு நவம்பர் 12ஆம் திகதி ரகசியமாக சனாதிபதியாக சத்தியப் பிரமாணம் செய்துகொண்டமை 1999ஆம் ஆண்டு ஏற்பட்ட பிழைகளை மூடிமறைக்க எடுத்துக்கொண்ட முயற்சியை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கே ஆகும்.

சனாதிபதி இரண்டாவது முறையாக தேர்தலில் போட்டி இடுவதற்கு முன்னதாக தனது செயல்களுக்கும் தனது அபிலாசைகளை நிறைவேற்றக்கூடியதொரு பிரதம நீதியரசர் ஒருவரை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் பிரதிபலிப்பே சரத்சில்வா அவர்களை பிரதம நீதிஅரசர் பதவியில் அமரவைத்து அதில் அவர் வெற்றிகண்டார்.

இரண்டாவது தேர்தல் ஆணையாளர் சுகயீனமுற்று தனது கடமைகளைக் கவனிக்க முடியாத நிலையில் தனக்கு சாதகமாக்கடமை புரியும் தேர்தல் ஆணையாளர் ஒருவரை நியமித்தார். தனது எதிர்கால அரசியல் பாதிப்படையாமல் இருப்பதற்கும், தான் ஒரு அரசியல் அனாதையாகிவிடக்கூடாது என்ற கொள்கையோடு இதை இவர் வெற்றிகரமாக நிறைவேற்றினார். ஆனால் இவைகளுக்கு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க எதிர்ப்புக்களைக் காட்டவில்லை. இதுவரையும் மௌனம் சாதித்து வருகின்றனர். இதை எதிர்த்தால் தான் இந்நாட்டில் சனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு வெற்றிகண்டால் அதை தனக்கு சாதமாகப் பயன்படுத்தி சந்திரிகா மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை அவர் பின்பற்றவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்.

ஆனால் சந்திரிகா இந்த நாட்டில் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு கிடைக்காது. அவர்களின் ஒத்துழைப்பு கிடைக்காத படியால் பாராளுமன்றத்தின் ஊடாக சிறுபான்மை தமிழர்களின் ஆதரவை எதிர்பார்த்தபடியால் 2000ஆம் ஆண்டு அவர்களின் ஆதரவும் கிடைத்தது. புதிய அரசியல் யாப்பொன்றை தயாரித்து, பழைய யாப்பினை இரத்துச் செய்வதன் மூலம் தேர்தல் முறைகளையும் மாற்றி 17வது அரசியல் சரத்தினையும் மாற்றி

**காலிங்க (ராவய)**
**மொழியாக்கம்:**
**அ.சக்திவேல்**

யமைத்து மேல் நீதிமன்றத் தீர்ப்பையும் பெற்று மூன்றில் இரண்டு அதிக பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து 12பாராளுமன்ற அங்கத்தவர்களை விலை கொடுத்து வேண்டுவதற்கான திட்டத்தினை மேற்கொண்டிருந்தார். ஆகையால் 17வது அரசியல் யாப்பு சரத்தினை மாற்றுவதற்கு மேல் நீதிமன்ற தீர்ப்பு இல்லாமல் அரசியலமைப்பை மாற்றி அமைக்கும் தீர்வுகளுக்கு சாதகமான பிரதிபலன்கள் ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற அங்கத்தவர்களிடமிருந்து ஆதரவுகள் கிட்டும் தருணத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ராஜதந்திர ரீதியில் செயற்பட்டு அந்த பன்னிரண்டு அங்கத்தவர்களையும் சிங்கப்பூர் அனுப்பியபடியால் சனாதிபதி இதில் படுதோல்வியைத் தழுவிக் கொண்டதுடன் பாராளுமன்றத்தையும் கலைக்க நேரிட்டது.

ஆனால் இப்பொழுது புதிய அரசியல் வியூகங்களை அமைத்து ஜே.வி.பி.யுடன் கூட்டுச்சேர்ந்து தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சிப்பீடம் ஏறினால் தனது பழைய திட்டத்தினை அமுல்படுத்த இலகுவாக இருக்கும் என திட்டத்தினை வகுத்துள்ளார். இந்த தேர்தலில் சிறு கட்சிகளின் ஆதரவு



தேடி தனது சொந்தக்கட்சியான சுதந்திரக் கட்சியையும் இக்கட்சிகளுக்கு அடகு வைத்துள்ளார்.

இந்த நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறையைமாற்றி அமைக்கவேண்டும் என்று கூறுவது நாட்டின் நன்மைகளுக்கோ அல்லது மக்களின் நன்மைகளுக்கோ அல்ல. தான் எதிர்காலத்தில் ஒரு அரசியல் அநாதையாகப் போகின்றேன் என்று நினைப்பது இனி இந்தநாட்டில் சனாதிபதியாக வரப்போகும் எவருக்கும் இந்தநடவடிக்கை அதிகாரங்களின் பலன்களை அனுபவிக்காத முறையை ஏற்படுத்துவதற்கே இந்த கூட்டு அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். சந்திரிகாவின் இந்த நடவடிக்கை இடதுசாரிகளையும் இணைத்துக் கொண்டு வெற்றிகண்டால் இது ஒருவீரச் செயல் என நான் நம்புகின்றேன். ஆனால் இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வெற்றி கொண்டு ஆட்சிப்பீடம் ஏறினால் சந்திரி காவின் இந்ததிட்டம் தோல்வி கண்டு கடைசியில் அவர் இந்தநாட்டில் அரசியல் அநாதையாகிவிடுவார் என்பதில் ஐயமில்லை.

---


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### ஆறுமுகம் - நடேசு

நெருந்தீவு வைத்திய பரம்பரையில் உதித்து டி.10 உருத்திரபுரத்தில் வசித்து வரும் ஆறுமுகம்-நடேசு அவர்கள் சமாதான நீதவானாக தெரிவுசெய்யப்பட்டதை வாழ்த்துகின்றோம்.

சமூக தொண்டனும் தமிழரசு கட்சி ஆரம்பகால உறுப்பினரும் மேஜர் இன்பநிலாவின் தந்தையுமாகிய இவரின் பொதுப்பணி மேன்மேலும் சிறப்புற வேண்டி இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கிளி/மேற்கு பிராந்திய மக்கள்.

(சி.9416)


## நன்கொடை

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சுயதொழில் வருமானத்தைஈட்டிக் கொடுப்பதற்கும், பெண்களுடைய திறமைகளை அபிவிருத்தி செய்வதற்கும் அவுஸ்திரேலிய அரசு 2.5 மில்லியன் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதனை இலங்கையிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் இலங்கை அரசிடம் வழங்கியுள்ளது.

## புத்தூக்கப் பயிற்சி

சமூகசுகாதார பணியாளர்களுக்கான புத்தூக்கப்பயிற்சி ஆரம்ப நிகழ்வு இன்று 15ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச்சங்க கிளி/ மாவட்டக்கிளை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. இலங்கை செஞ் சிலுவைச்சங்கம், அனைத்துலகச் செஞ்சிலுவைச்சங்கம், கனேடிய செஞ்சிலுவைச் சங்கம் இணைந்து மேற்படி புத்தூக்கப் பயிற்சியினை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## இளம்பெண் பலி

பொலிஸ்காரர் ஒருவர் வீதியில் திரிந்த விசர் நாயை கொல்ல மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் குறிதவறி இளம் பெண் ஒருவரின் உயிரை பலி கொண்டுள்ளது. இச்சம்பவம் ஹல்து முல்ல பெரகல நகரில் 10ஆம் திகதி நடந்துள்ளது.

---


## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 24 ● 06 ● 1937



மறைவு 15 ● 03 ● 2000

### அமரர் திரு.கந்தையா தங்கராஜா


புலோலி தெற்கு, புலோலி.

புலோலியைப் பிறப்பிடமாகவும் 5ஆம் வாய்க்கால்,கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்டு டென்மார்க்கில் எம்மை விட்டுப்பிரிந்த எம் அன்புத் தெய்வமே, எம்மைப்பிரிந்து நான்காண்டுகள் ஆகிவிட்டதே. உங்களைப் பிரிந்த துயரை எண்ணித் தினமும் கலங்கித் தவிக்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். தங்களைப் பிரிந்து துயரால் வாடும்,

மனைவி,மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

தகவல்:
திரு. த. சூரியகுமார்,
162.2ஆம் வட்டாரம்,
இரத்தினபுரம்,
கிளிநொச்சி. (சி.9419)

# வீரவணக்கம்



பிறப்பு
22 - 07 - 1935

இறப்பு
13 - 03 - 2004

## நாட்டுப்பற்றாளர்

# கந்தசாமி—ஈஸ்வரச்சந்திரன்

(ஆங்கில ஆசிரியர்)
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

கடமை தவறாத
கண்ணிய ஆசான்
காலன் கைகளுக்குள்
கட்டுண்டு விட்டாலும்
விடுதலையின் கண்- நீ
புகட்டிய கல்வியில்
புலர்வாய் எந்நாளும்
தமிழுலகு நிலைக்கும் வரை.

15-03-2004 (இன்று) மு.ப 10 மணிக்கு அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வு பரவிப்பாஞ்சான் கிளிநொச்சி தூயவன் அரசறிவியல் கல்லூரியில் வைக்கப்பட்டு மதியம் 12 மணிக்கு திருநகர் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இதில் அனைத்து மக்கள், போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

போராளிகள்.

(சி-9420)

# அஞ்சலிப்பூக்கள்



நாட்டுப்பற்றாளர்
உயர்திரு.
**கந்தசாமி ஈஸ்வரச்சந்திரன்**
(ஈஸ்வரன், ஈஸ்வரச்சந்திரன் சேர்)
அரசடிவீதி, வண்ணார்பண்ணை.
ஆங்கிலப் பேராசான் - ஆங்கிலக்கல்லூரி, தமிழீழ விடுதலைப் புலிகள்
முதுநிலை மொழிபெயர்ப்பாளர்
முன்னைநாள் ஏரிக்கரை நாளிதழ் உதவிப்பத்திரிகை ஆசிரியர்
BA Dip in social service
(சமூக சேவையில் கலைமாணிப்பட்டம்)

மலர்வு ——— உதிர்வு
22-07-1935 ——— 13-03-2004

எளிமையாய் வாழ்ந்து உயர்ந்தவரே!
பண்பாளனாய் திகழ்ந்தவரே!
எப்போதும் புன்னகையாய் பேசியே
ஏமைக்கவர்ந்தவரே!

கல்விதனில் உச்சமாய் இருந்தவரே!
கற்றதனை பிறர்க்கு - எளிதாய்
பகிர்ந்தவரே - ஏங்குகிறோம் நினைந்து
காலத்தில் வீழ்தல் புதுமையன்று
ஆயினும் - உங்களின் இழப்பினை
நினைந்துமே வாடுகிறோம் - நாமெல்லாம்

கொண்ட கொள்கைதனில் உச்சமாய்
உழைத்தீர் மண்பற்றுக் கொண்டீர்
உங்களை நினைந்து கொள்கிறோம்
உங்களின் இழப்பெமக்கு
ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்!
துயரினில் உழன்றிடும் உறவுகளோடு
இணைந்து நாமும் அஞ்சலிக்கிறோம்.

போராளிகள் - பணியாளர்கள்
நிதிப்பிரிவு , அரசியல்துறை - திரைப்பட வெளியீட்டுப்பிரிவு.

(சி-9333)

# கண்ணீர் அஞ்சலி



மறைவு:-13.03.2004
நாட்டுப்பற்றாளர்
அமரர்
**பொன்னையா சிறிதரன்**

கலங்காத உன் உயிரை
காலனவன் பிரித்த செய்தி கேட்டு
கலங்கியழும் உன் மனையாள்
உணர்விழந்து உருகுகின்றாள்.

அழகான உன் மழலை
அணைத்திடத்தான் நீயின்றி
அழுது புலம்புகின்றது
ஐயா நீ-எங்கு சென்றாய்

நெடுங்காலம் பணிபுரிந்து
நீங்காத இடம் பிடித்து
நனவாக நின்ற உன்னை
கனவாக காணுகின்றோம்
உன் சக ஊழியர்கள்

விடியும் எம் தேசத்தின்
ஒளி காணாச் சென்று விட்டீர்
விரைந்திடுவோம் நின் பணியில்
வீறுநடைபோட்டு

இவருடன் சாவடைந்த உயர்திரு. ஈஸ்வரச்சந்திரன் (ஆங்கில ஆசிரியர்) அவர்களுக்கும் எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

*பணிப்பாளர், வைத்தியர்கள்,*
*போராளிகள், பணியாளர்கள்.*

(சி-9421)

# கருணா: துரோகத்தின் உச்சம்

பொதுவாழ்வில் ஈடுபடும் மனிதன் எந்தச் சந்தர்ப்பத்திலாவது அவன் 'தான் தனது தன்னுடையது' என்ற சுயநல சிந்தனை வயப் படுபவனாக இருந்தால் அவன் தனது உயரிய இலட்சியத்திலிருந்து தவறிவிடுகிறான். முதலில் ஏற்படும் இதுதான் பின்னர் அவனை துரோகியாக மாற்றி விடுகின்றது.

கருணா என்கின்ற விநாயமூர்த்தி முரளிதரன் இதற்கு முழு உதாரணமாகும்.

ஜெயசிக்குறு சமரில் சாதனை படைத்த தளபதி கேணல் கருணா என்று உலகெங்கும் உள்ள தமிழ் மக்களால் மரியாதையுடன் அழைக்கப்பட்ட இந்த நபர், மனிதர்களுக்கு இருக்கக் கூடிய மிக மோசமான பலவீனங்களுக்கு உட்பட்டதால் தமிழீழ தேசியத்தை குழிதோண்டிப்புதைக்கும் நோக்கோடு செயற்பட்டு, கீழ்த்தரமான மனிதனாக-துரோகியாக தன்னை அடையாளப் படுத்தியிருக்கிறார்.

தமிழின விடுதலையை நேசிக்கின்ற ஒட்டு மொத்த சத்திகளாலும் அவர் ஓரம் கட்டப் பட்டுள்ள நிலையில், தமிழின விரோதசக்திகளும், தமிழ்மக்களை கூறுபோட்டு தமிழின விடுதலையை அழிக்க நினைக்கும் சக்திகளும்-கருணாவின் செவ்விகள் கருணாவின் செய்திகள் என்று தங்களுடைய ஊடகங்களில் இந்த விடயத்தை பூதாகரமாக்கி வெளியிட்டு வருகின்றன.

கருணா என்ற இந்த நபர் இந்த செவ்விகள் செய்திகள் மூலம் தன்னை மட்டக்களப்பு அம்பாறை மக்களின் மீட்பராகவும், அவர்களுக்காக தன்னை அர்ப்பணிப்பவராகவும் காட்ட முற்பட்டுள்ளார்.

ஆனால் கருணா என்ற இந்த நபர் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினராக இருந்தவர். விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மட்டு-அம்பாறை பிரதேச இராணுவ கட்டளைத் தளபதியாக இருந்தவர்.

விடுதலைப்புலிகள் இயக்கம் கட்டுப்பாடு மிகுந்த ஒரு இயக்கம். அந்த இயக்கத்தில் ஒருவர் இணையும் போதே இந்த இயக்கத்தின் தலைவரும், தேசியத்தலைவருமான மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் வழிநடத்தலை ஏற்றுக்கொண்டு அவருக்கென்றும் உண்மையாகவும், விசுவாசமாகவும் உழைப்பேன் என்று உறுதி மொழி எடுத்துக் கொள்வது வழக்கம்.இந்த உறுதிமொழியை ஒவ்வொரு நாளும் போராளிகள் தமது நாளாந்த செயற்பாடுகளை ஆரம்பிக்கும் போது எடுப்பதும் வழக்கம். கருணாவும் இதற்கு விதிவிலக்கானவரல்ல.

கருணா பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் தன்னை விசாரணை செய்வதற்காக வன்னிக்கு அழைத்ததாகவும், தான் அங்கு சென்றிருந்தால் தன்னை வீட்டுக் காவலிலோ, சிறையிலோ அடைத்திருப்பார்கள் என்று வாக்கு மூலம் கொடுத்திருந்தார்.

இதே செவ்வியில் தான் உயிருக்கு பயந்தவரல்ல என்றும், உயிராபத்து உட்பட எல்லா விதமான அச்சுறுத்தல்களையும் எதிர்பார்த்தே, போராட்டத்துக்கு வந்ததாகவும் அவர் வாய்ச்சவடால் அடித்ததும் குறிப்பிடத்தக்க தொன்று உயிருக்கு அஞ்சாத, அடக்கு முறைக்கு பயப்படாத வீராதி வீரன் கருணா துணிந்து வன்னிக்கு சென்றிருக்கலாமே?

குழந்தைகளின் மனதில் கூட இந்தக் கேள்வி எழவே செய்யும்.

மனதில் பயம் இல்லை என்றால், அவர் செயலில் நியாயத் தன்மை இருந்தால் அவர் முதல் இரண்டு நாட்கள் அறிக்கை விட்டது போல் தேசியத் தலைவரை கடவுளாக நம்பினால் நம்பிக்கையுடன் வன்னிக்குப் போயிருககலாமே?

தனது தலைமையின் அழைப்பை அவர் நிராகரித்ததன் மூலம் தான் தினம் தினம் செய்த மற்றவர்களைக் கொண்டு செய்வித்த சத்தியப் பிரமாணத்தை பொய் என்று நிரூபிக்கிறார். ஒரு போராளிக்கும், கலககாரனுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் என்பது சத்தியத்துக்கு கட்டுப்படுவதிலேயே இருக்கிறது. ஒரு போராளி உயரிய இலட்சியத்துக்காக தன்னை அர்ப்பணிப்பவன். தன்னுடைய சொல்லை அல்லது தான் சார்ந்த அமைப்பின் சொல்லை காப்பதற்காக அவன் உயிரைக் கூட கொடுக்கக் கூடியவன்.

ஆனால் பொய் வாக்குறுதிகளைக் கொடுத்து இல்லாத ஒன்றைப் பெரிதாக்கி, அதன் மூலம் தான் ஆதாயம் அடைபவன் தான் கலகக்காரன் இவன் தனக்கு ஆதாயம் கிடைக்கிறதென்றால் எந்தத் துரோகக் கும்பலோடும் கூட்டுச் சேரத்தயங்க மாட்டான்.

உண்மையில் இந்த அளவுகோல்ப் படி பார்த்தால் கருணா ஒரு மோசமான கலகக் காரணாகும்.அடுத்து இராணுவத் தளபதிக்குரிய கடமை என்பது, கட்டளைக்குக் கீழ்ப்படிவதாகும். அது விடுதலைப்புலிகளாக இருந்தால் என்ன, வேறு எந்த இராணுவமாக இருந்தாலும் மேலதிகாரிகளின் கட்டளைக்கு கீழ்ப்படிவது, அதை ஏற்று நடப்பது தளபதிகள் மற்றும் அனைத்து படைப்பிரிவுகளைச் சேர்ந்தவர்க ளினதும் கடமையாகும்.

கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் இருப்பதும், உரிய அனுமதியின்றி படையை விட்டு விலகுவதும், தப்பியோடுவதும் கடுமையான தண்டனைக்குரிய குற்றமாகும். இது சர்வதேச அளவில் நடைமுறையிலுள்ள ஒரு சட்டமாகும். இந்த வகையிலும் கருணா தன்னிச்சையாக விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து செல்லப்போவதாக அறிவித்ததானது நியாயப்படுத்தக் கூடியதொன்றல்ல.

கருணாவை வன்னிக்கு அழைக்கும் வரை அவருக்கு "மட்டு- அம்பாறை" என்ற பிரதேச வாதம் தேவைப்படவில்லை.

பேச்சுவார்த்தைக்குச் சென்றபோதும்-ஐரோப்பிய பயணம் மேற்கொண்ட போதும், அவருக்கு அது தேவைப்படவில்லை.

கிழக்குக்குரிய அபிவிருத்தி மற்றும் புனரமைப்பு வேலைகளுக்கான பொறுப்பை தேசியத்தலைவர் அவர் வசம் விட்டபோதும் அவருக்கு அவர் இன்று சுட்டிக்காட்டும் வன்னித் தலைமை நல்லதாக இருந்தது.

கிழக்கின் புனரமைப்பு வேலைகளுக்கு புலம்பெயர்ந்த நாட்டு மக்களிடம், நிதியுதவி கோரிய போதும் அவருக்கு வன்னித் தலைமை பிரச்சினை இல்லாத ஒன்றாகத்தான் இருந்தது.

அப்படி என்றால், ஏன் கருணா இப்போது திடீரென்று இந்தப் பிரதேச வாதத்தை எழுப்புகின்றார் என்ற கேள்வி எழுகின்றது.இந்தக் கேள்விக்கான பதிலும் கருணா பி.பி.சி. தமிழோசைக்கு அளித்த பதிலிலேயே இருக்கின்றது.

திறலோன்

விடுதலைப்புலிகளின், நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி, உளவுத்துறைப் பொறுப்பாளர் பொட்டு அம்மான், காவல் துறைப் பொறுப்பாளர் நடேசன் இந்த மூவரையும் அமைப்பை விட்டு நீக்க வேண்டுமென்று அவர் நிபந்தனை விதித்தார். இந்த மூவரின மீதும் அளவுக்கதிகமாக ஆத்திரப்படுகின்றார்.

இதன் பின்னணி என்னவென்று ஆராய்ந்தால் நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழேந்தி அவரைக் கணக்குக் கேட்டார். கருணாவால் கணக்குக் கொடுக்க முடியவில்லை. அதனால் தமிழேந்தி வேண்டாதவராகி விட்டார்.

அடுத்து பொட்டுஅம்மான் கருணாவின் சீரழிவு நடவடிக்கைகளை அறிந்து தேசியத் தலைவரிடம் சொல்லியிருந்தார். இதனால் அவர் மீது கருணாவுக்கு அடக்கமுடியாத ஆத்திரம் தான் செய்த மக்கள் விரோதச் செயல்கள் எல்லாவற்றையும் பொட்டு அம்மானே செய்ததாக கூறித்தப்பிக்க முயல்கிறார்.

அடுத்து தமிழீழ காவல்த்துறையினர் கருணாவின் ஒழுங்கீனங்கள் மற்றும் மக்கள் விரோத செயற்பாடுகளைப் பற்றிய தகவல்களைத் திரட்டி தமது பொறுப்பாளர் நடேசனுக்கு அறிவித்திருந்தார்கள். அவர் தேசியத் தலைவருக்கு அனைத்தையும் தெரியப்படுத்தினார். இதனால் காவல்துறைப் பொறுப்பாளர் நடேசனும் கருணாவின் முக்கிய எதிரியாகிவிட்டார்.

தன்னுடைய தவறுகள் வெளியே தெரிந்துவிட்டது என்பதை உணர்ந்த கருணா முதலில் கிழக்கில் உருவாக்கப்பட்ட நிதித்துறை, காவல்துறை, உளவுப்பிரிவு என்பவற்றை முடக்குகின்றார். 'பிரதேச வாதத்தைக் கிளப்பிவிட்டு' அதில் குளிர்காய நினைக்கும் சில ஆய்வாளர்கள் மற்றும் கனவான்களுடன் ஆலோசனை நடத்துகின்றார். இந்தப் பின்னணியில்தான் தலைவரின் அழைப்பை நிராகரித்து விட்டு அவர் தன்னைக் காத்துக்கொள்வதற்காக தனிவழி செல்லும் பிரகடனத்தை வெளியிடுகின்றார்.

உண்மையில் தாயக விடுதலையை நேசிக்கும் எந்தப் போராளியும், இந்தப் பிரதேச வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனென்றால் கந்தகவெடி பொருளை மடியில் சுமந்து சென்று தாயக விடுதலைக்கு தங்களை ஆகுதியாக்கிய கரும்புலிகள் ஊர், நகரம், பிரதேசம் என்றெல்லாம் பார்க்கவில்லை. தாயகமண் மீட்புக்காக தங்களது இன்னுயிர்களை அர்ப்பணித்த மாவீரர்கள் 'தாயகக்கனவுடன்' தான் வீரச்சாவைத் தழுவியிருக்கிறார்கள்.

தாயக விடுதலைக்காக உயிரைத் துச்சமாக மதித்துக் களமிறங்கும் போராளிகள் மத்தியில்-வன்னி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை என்ற பிரதேசவாதம் இருப்பதில்லை. ஏனென்றால் அவர்கள் தாயக விடுதலைக்காக ஆயுதமேந்தியவர்களே அல்லாமல்-பிரதேச விடுதலைக்காக அல்ல. ஒவ்வொரு போராளியும்-தமிழர் தாயகத்தின் ஒவ்வொரு அங்குல மண்ணையும்-தனது வியர்வையையும், இரத்தத்தையும் உயிரையும் விலையாகக்கொடுத்துத்தான் மீட்கிறார்கள்.

மட்டக்களப்பிலுள்ள ஒவ்வொரு அங்குல மண்ணும் வன்னியில் உள்ள ஒவ்வொரு அங்குல மண்ணும் போராளிகளைப் பொறுத்தவரை சமமான முக்கியத்துவமானவை. மட்டக்களப்பை அல்லது அம்பாறையை அல்லது திருகோணமலையைப் பிரித்துவிட்டு தாயக விடுதலை கிடைக்கப் போவதில்லை என்பது ஒவ்வொரு போராளிக்கும் தெரியும். கருணாபோராளி என்ற உயரிய நிலையில் இருந்து விலகிச்சென்று தமிழர் தாயகத்தைப் பறித்து தாயக விடுதலையை அழிக்க நினைக்கும் துரோகச் சக்திகளின் வலையில் விழுந்துவிட்டதால் இந்த அடிப்படைப் பார்வை அவருக்கு மறந்துவிட்டது.

எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து எந்தப் பிரதேசத்துக்கோ சொந்தக்காரனாக இருக்கும் சிங்களப் படையினர் எமது மண்ணிலே வந்து எமது மக்களை அழித்து, எமது பிரதேசத்தை ஆக்கிரமிக்கின்றான் என்றால்: அதற்கு காரணம், அவன் தனது தலைமையின் கட்டளைக்கு கீழ்ப்படிகின்றான். உத்தரவுகளை நிறைவேற்றுகின்றான். களத்திலே கிடைக்கும் தோல்விகளைப் பொறுத்து அவன் பதவி குறைக்கப்படும்போது, அல்லது இடமாற்றப் படும் போது "நான் ஏன் மட்டக்களப்பிலும், வன்னியிலும், யாழ்ப்பாணத்திலும் போய் சாகவேண்டும்" என்று பிரதேசவாதத்தைக் கிளப்பி இராணுவத்தை பிளவுபடுத்த அவன் முயலவில்லை. அவ்வாறு செய்தால் அவனைப பொறுத்தவரை அது தேசத்துரோகம் என்பது அவனுக்குத் தெரியும்.

அந்த இனவெறிபிடித்த சிங்கள பௌத்த படையினருக்குரிய 'பண்பு' கூடஇல்லாத கருணா "நான் இத்தனை போராளிகளைக் கொண்டுபோய் வன்னி மண்ணிலே மாவீரர்களாக்கினேன்" என்று போராளிகளின் விலைமதிக்கமுடியாத தியாகத்தை கணக்காகக் காட்டி, அதில் குளிர்காய நினைப்பது மன்னிக்கவே முடியாத மிக அசிங்கமான பொறுக்கித்தனமாகும். மட்டு-அம்பாறை போராளிகள் தேசியத்தலைவரின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொண்டுதான் போராட்டத்துக்கு வந்தார்களே அன்றி கருணாவை நம்பியல்ல என்பதும் குறிப்பிடப்படவேண்டிய ஒன்று. வரலாற்றுக்காலத்திலிருந்தே வடக்கையும், கிழக்கையும் பிரித்து, தமிழினத்தை அழிக்க நினைத்த சக்திகள் இன்று-கடைஅடைப்பு, ஆர்ப்பாட்ட ஊர்வலம், மிரட்டல், கொடும்பாவி எரிப்பு என்று பிரச்சினையை பூதாகரமாக்க தங்களாலான அனைத்துக் காரியங்களையும் இந்தக் கருணா என்ற நபரை முன்நிறுத்தி செய்து கொண்டிருக்கின்றன. சமாதானம்- தமிழ் மக்களுக்கு எந்த முடிவையும் கொண்டு வரவில்லை. தமிழர் தாயகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் இரவல் வீடுகளில்தான் வாழுகின்றார்கள். இராணுவ அடக்குமுறையும், அச்சுறுத்தலும் இன்னும் தொடர்ந்த வண்ணம் தான் இருக்கிறது.

வீடிழந்த மக்கள்-இன்னமும் கீற்றுக் கொட்டில்களுக்குள்தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். தமிழர் தாயகத்தில் கதவும் கூரையும் இல்லாத வீடுகள் இன்னமும் இலட்சக் கணக்கில் இருக்கின்றன. இன்னமும் தமிழ் சிறார்கள் மரநிழல்களின் கீழே இருந்து படிக்கும் நிலைமாறவில்லை. ஆனால சமாதானம் கருணாவை மாற்றியுள்ளது. தமிழின விரோத சக்திகளின் நோக்கத்துக்கு துணை போன அவரது துரோகத்தை அம்பலப் படுத்தியுள்ளது.

காலத்துக்காலம் வரலாற்றில் இவ்வாறான துரோகிகள், வந்து போனதை நாம் பார்த்திருக்கின்றோம். 'எதிரியைவிட துரோகி ஆபத்தானவன்' என்று தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் சொல்வதுண்டு. துரோகிகளை வளரவிட்ட, வளர்த்துவிட்ட இனம் வளர்ந்ததாக, வாழ்ந்ததாக சரித்திரம் இல்லை. அதேபோல சிறந்த ஆளுமையும், தீர்க்க தரிசனமும் மிக்க தலைமைத்துவத்தின் முன்னால் 'துரோகம்' தோற்றோடிய வரலாறும் நிறையவே இருக்கிறது. நமது தேசியத் தலைவரின், விடுதலைப் பாதையில் இப்படியான துரோகத்தனங்கள் அவருக்கு புதிதானதல்ல.

அவரது வழிகாட்டலில் தொடரும் தாயக மீட்புப் பயணத்தை இந்த சலசலப்புகள் தடுத்து நிறுத்திவிட முடியாது என்பது கருணாவுக்கு தெரியாவிட்டாலும் அவரை இயக்குகின்ற தமிழின விரோத சக்திக்கு நிச்சயம் தெரிந்திருக்கும்.

# முன்விற்பனை வீட்டுத் திட்டத்தில் இணையவுள்ளோர் கவனத்திற்கு!

கிளிநொச்சி மாவட்டத்தில் வீடற்றோரின் பிரச்சினையினை சீர் செய்யும் முதல் நடவடிக்கையாக முன்விற்பனை வீட்டுத்திட்டத்தினை அமுல் படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையினர் கிளிநொச்சி மாவட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள சிவபாதகலையகம் அருகாமையிலுள்ள பொன்நகர் கிராமத்தில், கால் ஏக்கர் விஸ்தீரணம் கொண்ட காணியில் மக்கள் விருப்பத்திற்கேற்ப வீடமைத்து கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொழில் புரிபவராகவும், வீட்டின் மதிப்பீட்டுத் தொகையில் 25வீதத்தை முற்பணமாக செலுத்தக் கூடியவராகவும், கிளிநொச்சி மாவட்டத்தில் விண்ணப்பதாரர் வீடமைப்பதற்கு காணி இல்லாதவராகவும், திருமணமானவராகவும் இருத்தல் வேண்டுமெனவும் இதற்கான விண்ணப்பங்களை 25.03.2004க்கு முன்னர் மாவட்ட முகாமையாளர் தேசிய வீடமைப்பு அதிகாரசபை கிளிநொச்சி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கும் படியும் மாதிரி விண்ணப்பப் படிவங்களை தே.வீ.அ.சபை அலுவலகத்தில் பார்வையிடலாமென தே.வீ.அ.சபை மாவட்ட முகாமையாளர் வேறீஸ்கந்தவேல் தெரிவித்துள்ளார். (சோ)

-சமுர்த்தி நிதிகுறித்த விவகாரம்-

# சனாதிபதியிடம் நட்டஈடுகோரி வழக்குத்தாக்கல் செய்ய எஸ்.பி.முடிவு

(கொழும்பு)

தாம் 2000மில்லியன் ருபாவை சமுர்த்தி நிதியில் இருந்து கையாடியதாக சனாதிபதி சுமத்திய குற்றச்சாட்டை 14 நாட்களுக்குள் அவர் விலக்கிக்கொள்ள வேண்டும் இல்லையேல் அவருக்கு எதிராக 1000மில்லியன் ருபா நட்டஈட்டைக் கோரி தாம வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சின் சட்டத்தரணிகள் சனாதிபதியிடம் கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

எஸ்.பி.திசாநாயக்க சமுர்த்தி நிதியில் இருந்து 2000மில்லியன் ருபாவை கையாடியதாக அண்மையில் குற்றம் சுமத்திய சனாதிபதி அதற்கு எதிராக அமைச்சர் வழக்கு தொடருவதனால், தாம்நிறைவேற்று அதிகாரத்தை கைவிடத்தயார் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், தாம் சனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடருவதற்கு வாய்ப்பாக அவர் நிறைவேற்று அதிகாரத்தைக் கைவிட வேண்டும் எனவும் அமைச்சர எஸ்.பி.திசாநாயக்கவின் சட்டத்தரணிகள் சனாதிபதியிடம் கேட்டுள்ளனர். (32)

# பொருட்காட்சி

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் முரசுமோட்டை மகளிர் அபிவிருத்தி நிலைய மாணவிகளால் நடாத்தப்படும் தையல், மனையியல் பொருட்காட்சி இன்று 15ஆம் திகதி கண்டாவளைப் பிரதேச செயலர் மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் சீ.சிவசொருபநாதபிள்ளை தலைமையில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது. (14)

# கடந்த பொதுத்தேர்தல் காலத்தைவிட தற்போது தேர்தல் வன்செயல்கள் உயர்வு

## பொலிஸ் தேர்தல்செயலகம் தகவல்

(கொழும்பு)

**கடந்த பொதுத்தேர்தலின் போது இதே காலப்பகுதியில் ஏற்பட்ட தேர்தல் வன்செயல்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை அதிக வன்செயல்கள் ஏற்பட்டுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக பிரதி பொலிஸ்மா அதிபராக ஜயந்த விக்கிரமரட்ண தெரிவிக்கையில்;தேர்தல் தொடர்பாக நேற்று முன்தினம் 461 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவித்தார்.

இதேவேளை கடந்த பொதுத் தேர்தலில் 10 வன்முறைச் சம்பவங்களே இடம்பெற்றன. இம்முறை 93 வன்செயல்கள் இடம்பெற்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால்,வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளும் திகதி முடிவடைந்ததிலிருந்து 25 நாட்களில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடுகளை ஒப்பிடுகையில் இந்தத் தடவை குறைவான முறைப்பாடுகளே தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.இதேவேளை தேர்தல்வன்முறைகள் தொடர்பாக இதுவரை 24 பேர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டு அவர்கள் மேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க இராணுவத்தில் இருந்து தப்பி ஓடிய 112 பேரையும் குற்றச் செயல்களில் ஈடுபட்ட வேறு சிலரையும் பொலிசார் ஆயுதங்களுடன் கைது செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

## படையினருடன் ஆராய்வு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வாழும் மக்கள் எதிர் வரும் தேர்தலில் சுதந்திர வாக்களிப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் இன்று சிறிலங்கா படைத்தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## மந்துவிலில் மீளக்குடியமர்ந்த மக்களின் விபரம் திரட்டல்!

தென்மாரட்சி மந்துவில் பிரதேசத்தில் மீளக்குடியேறியுள்ள மக்களது விபரங்களைப் படையினர் திரட்டிவருவதால் மக்கள் மத்தியில்பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து மேற்படி பகுதியை ஆக்கிரமித்து அப்பகுதிகளை இராணுவப் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தி வைத்திருந்த படையினர் அரசு-புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரும் அவற்றை அகற்றி அப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கவில்லை.

இதனால் விசனமடைந்த அப்பகுதிமக்கள் நடத்திவந்த பலத்த போராட்டங்களைத் தொடர்ந்து அண்மையில் அப்பகுதியில் உள்ள சில இடங்களில் மட்டும் மக்களை மீளக் குடியமர அனுமதித்திருந்தனர்.

இதற்கமைவாக அங்கு மீளக் குடியமர்ந்து வாழ்ந்துவரும் மக்களின் குடும்பத்தவர்கள் மற்றும் அங்கத்தவர்களின் விபரங்கள் என்பவற்றைச் சேகரிக்கும் பணியில் கடந்த சில நாட்களாக படையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (33)



கிளிநொச்சியில் புதிதாக அமைக்கப்பெற்ற இந்து இளைஞர் மண்டபத்தினை கிளி/அரச அதிபர் தி.இராசநாயகம் நாடாவினை வெட்டி திறந்து வைக்கின்றார். (படம் -சோதி)

## வலைப்பந்தாட்டப் போட்டியில் தெரிவான பாடசாலைகள்

(முல்லைத்தீவு)

கடந்த 10ஆம், 11ஆம் திகதிகளில் கரைதுறைப்பற்று கோட்ட மட்டத்திலான வலைப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

இதில் 15 வயதுப் பிரிவில் கொக்குளாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும், கலைமகள் வித்தியாலயமும் தெரிவு செய்யப்பட்டன. இதேபோன்று 17 வயதுப்பிரிவில் முல்லைத்தீவு மகாவித்தியாலயமும், கொக்குளாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையும் தெரிவாகியது.

19 வயதுப்பிரிவில் கொக்குளாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும், குமுழமுனை மகாவித்தியாலயமும் தெரிவு செய்யப்பட்டு வலயமட்டப் போட்டிகளுக்கு அனுப்பப்படவுள்ளதென கரைதுறைப்பற்று கோட்டக்கல்வி அதிகாரி தியாகராஜா தெரிவித்தார். (20)

## இலவசக் கணினிக் கற்கை நெறியில் சித்தி பெற்றோருக்கு சான்றிதழ்

(முல்லைத்தீவு)

வவுனியா போரூட் நிறுவன அனுசரணையுடன் வவுனியா கொம்ரெக் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட அரச உத்தியோகத்தர்களுக்கான இலவசக்கணினிக் கற்கைநெறியில் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 40 உத்தியோகத்தர்கள் பங்குபற்றினர்.

இரண்டு பிரிவுகளாக நடாத்தப்பட்ட இப்பயிற்சி நெறியில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த இ.செந்தில்குமரன்,சி.ரீ.ஆர். விமலேந்திரன், சுபாஸ்கரன், க.ஜெயக்குமார், செல்வி மலலிதா, செல்வி ந.ஜெயந்தி, ந.சிவதாஸ், அருள்செல்வன் ஆகிய 9 உத்தியோகத்தர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## பாடசாலைகளில் சுகாதாரம் பேணல் மன்னார் கல்விப் பணிமனையில் ஆராய்வு

(மன்னார்)

பாடசாலை மாணவர்களிடையே தனிநபர் சுகாதாரம் பேணல், பாடசாலைகளில் சுகாதாரம் பேணல் என்பன குறித்து மன்னாரில் செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

மன்னாரிலுள்ள பாடசாலைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட உயர்தர மாணவாகளுக்கும் அதிபர், ஆசிரியர்களுக்குமான கலந்துரையாடலொன்று நேற்று முன்தினம் மன்னார் கல்விப் பணிமனையில் இடம்பெற்றது. மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் தலைமையிலான இந்தக் கலந்துரையாடலில் சுகாதாரம் பேணல் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடைமுறைகள் குறித்து விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

மன்னார் மாவட்டத்திலுள்ள சுகாதார உயர் அதிகாரிகளும், சுகாதார கல்வி ஆலோசகர்களும் கலந்து கொண்டு இங்கு உரையாற்றினர்.

பாடசாலைகளில் சுகாதாரம் பேணுதல், மாணவரிடையே தனிமனித சுகாதாரம் பேணல் என்பன குறித்தே இங்கு விரிவாக எடுத்துக் கூறப்பட்டதுடன் இவற்றைக் கடைப்பிடிப்பது குறித்த திட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. (ரி)

## கடற்புலிகள் பிரதேசத்தில் சமகால அரசியல் கருத்துரை

(முள்ளியவளை)

முல்லைத்தீவு பிரதேசத்தில் முல்லைத்தீவு பிரதேச கடற்புலிகளின் அரசியல் துறையினரின் ஒழுங்குபடுத்தலில் பிரதேசத்திற்குட்பட்ட பொது அமைப்புக்களுடனும், பொதுமக்களுடனுமான சமகால அரசியல் கலந்துரையாடல் இடம் பெற்று வருகின்றது.

கடற்புலிகளின் முல்லைத்தீவு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் தலைமையில் நடைபெற்று வரும் கலந்துரையாடல்களில் சமகால அரசியல் நிலவரம் தொடர்பான கருத்துரைகளை கடற்புலிகளின் முல்லைமாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ரங்கன், முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்க முகாமையாளர் சிவலிங்கம் உட்பட பல பிரமுகர்கள் நிகழ்த்தி வருகின்றனர். (ஆ)


# சேரன் வாணிபம்

## பணி வேண்டுகை

சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்களுக்கு மேலதிக சிறப்புப் பயிற்சி வழங்கப்பட்டு, பணி வழங்குவதற்கான வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

மேலதிக தகைமைகள்:-

01) ஆண்டு 09 வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.

02) வயது 23-35 இற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

03) வன்னிப் பெருநிலப்பரப்பில் நிரந்தரமாக வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

வேண்டுகையாளரால் சொந்தக் கையெழுத்தில் எழுதப்பட்ட தன் விபரத்துடன் 17.03.2004 புதன்கிழமை காலை 10.00 மணிக்குச் சேரன் வாணிபம்,நடுவப் பணிமனை,கிளிநொச்சி என்னும் முகவரிக்கு வருகை தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சேரன் வாணிபம்,
நடுவப்பணிமனை,கிளிநொச்சி.

(சி.9418)


5ம் ஆண்டு நினைவு நாள்



பிறப்பு 1977 • 05 • 23

வீரச்சாவு 1999 • 03 • 15

கப்டன் கீதன்

**தனபாலசிங்கம் — மதியரசன்**

**கரவெட்டி — யாழ்.**

பேரினவாதத்தின் பேரிரச்சல் கேட்டு
வேங்கையென வேட்கையோடு எழுந்தவீரனே
தலைவன் நாமமே வேதமென
தலை நிமிர்ந்து நின்ற தனையனே.

தாய் மண்ணின் மானம் காக்க என
தனை ஈந்த தயாளனே.
தாரகையாக நீ விண்ணில் சுடர்விட
தாயகம் மலர்வதைப் பார்த்திடடா.

ஐந்து ஆண்டுகள் சென்றதடா நீ விதையாகி.
ஐயமில்லையடா எம் மனதில் நீ இருப்பது.

இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன விருந்தில் உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

த.முகவரி:-
தபால்கந்தோர் அருகாமை,
தண்ணீரூற்று,முள்ளியவளை

தகவல்:-
தாய் ஈஸ்வரி

(சி.7172)



**சிந்தனைக்கு**

சுதந்திர எழுச்சியின் உந்துதலால் மனித வரலாற்றுச் சக்கரம் சுழல்கின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 15 -03-2004

# தமிழரின் கடப்பாடு!

வட-கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள தேர்தலில் கருணா என்கின்ற முரளிதரனின் நடவடிக்கையானது எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பது இன்று பரவலாகப் பேசப்படும் விடயங்களில் ஒன்றாகவுள்ளது. அதாவது மட்டு-அம்பாறை மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன? அவர்கள் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள் என்பதே இவ்விவகாரம் முதன்மைபெறக் காரணமாகும்.

கருணா என்கின்ற முரளிதரனின் நடவடிக்கையானது மட்டு-அம்பாறை மாவட்டங்களில் பிரதேசவாதத்திற்கு தூண்டுகோளாக இருக்கையில் மட்டு-அம்பாறை மாவட்டங்களில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினர் தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பனவற்றை வலியுறுத்தி தேர்தலில் போட்டியிடுதல் என்பது எத்தனைதூரம் சாத்தியமானது என்பதே இது குறித்த கேள்விக்கும், நெருக்கடிக்கும் காரணமாகும்.

ஏனெனில், இத்தேர்தலைத் தமிழர் தேசியக்கூட்டமைப்பு எதிர்கொள்ளத் தயாரானபோது கூறப்பட்டதுபோன்று தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமை, தமிழ் மக்களின் ஏகபிரதிநிதித்துவம் என்பனவற்றை வலியுறுத்துவதற்கான செயற்பாட்டிற்கு கருணாவின் நடவடிக்கைகள் குந்தகமாகியுள்ளது.

கருணாவின் தற்போதைய நடவடிக்கையானது எதிரிக்குச் சகுனப்பிழையாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தனது மூக்கை அறுத்துக்கொண்டது போன்றதாகும். அதாவது தனது தனிப்பட்ட அபிலாசைகளுக்காக மட்டு-அம்பாறை மக்களின் எதிர்காலத்தை குழிதோண்டிப் புதைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எனலாம்.

இதன்காரணமாக இன்று மட்டு-அம்பாறை மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் நடவடிக்கைகள் ஒருவகை குழப்பத்திற்குள்ளாகியுள்ளதெனலாம். அதாவது தமிழர் தாயகம், தேசியம் என்பனவற்றையும் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் புலிகளே என்பனவற்றையும் வலியுறுத்தித் தேர்தலில் களமிறங்கத் தயாரான மட்டு.- அம்பாறை மாவட்ட கூட்ட மைப்பினர் இன்று கருணாவின் செயற்பாட்டால் குழப்பத்திற்கும், குறுகிய சிந்தனைக்கும் உட்பட வேண்டியவர்களாகியுள்ளனர்.

இந்நிலையில் மட்டு-அம்பாறை மாவட்டங்களில் தேர்தலானது தமிழர் தேசியக்கூட்டமைப்பினருக்கு சில பின்னடைவுகளைச் சிலவேளைகளில் ஏற்படுத்தக்கூடும். இதனால் சிங்களப் பேரினவாத சக்திகளுக்கும், விடுதலைப்புலிகளுக்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட 'உள்நாட்டு', வெளிநாட்டு சக்திகள் சிலவும் மகிழ்ச்சியும் அடையக்கூடும்.

அதாவது, தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்பவை வலுவிழந்து போவதாக அவர்கள் கற்பனை செய்து கொள்ளக்கூடும். ஆனால் இவை தற்காலிகமானவை மட்டுமே. கருணாவின் துரோகச்செயலினால் தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவை சிதைக்கப்படவோ பலவீனப்பட்டுவிடவோ போவதில்லை. தற்போதைய சூழ்நிலையில் மட்டு-அம்பாறை மாவட்டங்களில் எதிர்வரும் தேர்தலில் சிறிது பின்னடைவு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருப்பினும் தமிழர் தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பன சிதைவுறப் போவதில்லை. சில தீய சக்திகளின் தூண்டுதலினால் ஒரு சில தனி நபர்களின் நடவடிக்கையினால் தமிழ் மக்களின் உறவையும், உணர்வையும் பிரித்துவிட முடியாது. அத்தோடு, யாழ்.மாவட்டத்திலும், வன்னிப்பெருநிலப்பரப்பிலும், கிழக்கில் திருமலையிலும் தமிழ் மக்கள் ஏகோபித்த ரீதியில் இவற்றை வலியுறுத்தி முற்பட்டு நிற்பதன்மூலம் கருணாவின் துரோகத்திற்கு பதிலடிகொடுக்க முடியும்.

கருணாவின் செயற்பாடானது மட்டு-அம்பாறை மாவட்டங்களில் பிரதேசவாதத்திற்கு வித்திடுவதாக இருப்பினும் தமிழர் தேசியக்கூட்டமைப்பினர் கருணாவின் செயற்பாட்டினால் ஓர் இக்கட்டிற்குள் தள்ளப்பட்டிருப்பினும் அதன் வேட்பாளர்கள் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் என்பதையும் தாயகம் பிளவுபடுவதையும் ஆதரிப்பதாக இல்லை. இதனை தேசியக்கூட்டமைப்பு தலைமை வேட்பாளர் ஜோசப்பரராஜசிங்கம் அவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

அத்தோடு, யாழ், வன்னி, திருமலை தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடும் தமிழர் தேசியக்கூட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் தமிழர்தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பனவும் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் என்பதும் வலியுறுத்தப்படுவதாக இருக்கும். மேலும், தமிழ் மக்களின் உரிமைப்போராட்டமும் வலுப்படுத்தப்பட்டதாக இருக்கும்.

ஆகையினால், கருணாவின் துரோகச் செயலுக்குப் பதிலடி கொடுக்கும் வகையிலும் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை வலுவிழக்கச் செய்யும் நோக்கில் செயற்படும் சக்திகளுக்கும், கருணாவின் துரோகச் செயலினால் பெரும் மகிழ்விற்குள்ளாகியிருக்கும் பேரினவாத சக்திகளுக்கும் பதிலடி கொடுக்கும் வகையிலும், தமிழ் மக்களின் உணர்வுகளைச் சர்வதேசத்திற்கு முன் வெளிப்படுத்தும் முகமாகவும் இத் தேர்தலைத் தமிழ் மக்கள் கையாள வேண்டும். அதற்காக தேசியக்கூட்டமைப்பை ஆதரித்து மக்கள் வாக்களிப்பது அவர்களின் கடப்பாடாகிறது.

# பிரச்சினைக்கு அமைதி வழியில் நிரந்தரத் தீர்வு புலிகளின் தெளிவான நிலைப்பாடு இதுவாகும்

## -ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் சிரேஷ்ட உறுப்பினர் இப்ராகிம்

(கொழும்பு)

மீண்டும் ஒரு யுத்தம் வேண்டாம் என்பதே புலிகளின் உண் மையான நிலைப்பாடாகும் என்று தென்னாபிரிக்க துணை சனாதிபதியின் முன்னாள் ஆலோசகரும் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினருமான இப்ராகிம் கூறியுள்ளார்.

இலங்கை அரசியல் நிலவரம் குறித்து சர்வதேச ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; அண்மையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் உயர்மட்டக் குழுவினர் தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்திருந்தார்கள்.

என்னையும் சந்தித்து உரையாடினார்கள். மீண்டும் ஒரு யுத்தத்தில் ஈடுபடப் போவதில்லை, என்றும் யுத்தநிறுத்த உடன்படிக்கை விதிகளை முற்றுமுழுதாக பேணி நடப்போம் என்று உறுதியாகத் தெரிவித்தார்கள். இலங்கைப் பிரச்சினைக்கு அமைதியான முறையில் நிரந்தரத்தீர்வு காணப்பட வேண்டும் என்பது அவர்களின் தெளிவான நிலைப் பாடாகும் என்றும் கூறியுள்ளார்.

# நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் சனாதிபதி, பிரதமருடன் இன்று சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சூல்கெய்ம் சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரைச் சந்திக்கவுள்ளார்.

இவர் நாளை செவ்வாய்க்கிழமை நோர்வேக்குத் திரும்புவதற்கு முன்னதாக இந்தச் சந்திப்பு நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சந்திப்புக்கள் இன்று இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்போது தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்புக்கு வந்த எரிக் சூல்கெய்ம் முதலில் யாழ். குடாநாட்டுக்குச் சென்று அங்கு மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளருடன் கலந்துரையாடியதுடன் பின் கிளிநொச்சி வருகை தந்து தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியிருந்தமை தெரிந்ததே.

# ஜே.வி.பி.யுடன் கூட்டணி அமைத்ததால் பலம்வாய்ந்த சக்தியாக மாறியுள்ளோம்

## அநுரா பண்டாரநாயக்க கூறுகின்றார்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிக்கு வந்ததும் சுதந்திரமான பொலிஸ் சேவைக்குத் தடையாக இருக்கும் பொலிஸ் சேவை ஆணைக்குழு நீக்கப்பட்டு விடும்.

இவ்வாறு மஹவய கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் அநுரா பண்டாரநாயக்க கூறியுள்ளார்.

பொலிஸ் ஆணைக்குழுவின் தலையீட்டினால் தவறு செய்யும் பொலிசாரை இடமாற்றம் செய்ய முடியாமல் உள்ளது.

எனவே இந்த ஆணைக் குழுவை நீக்கிவிடுவதுதான் ஒரே வழியாகும். 2001ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் பொதுசன ஐக்கிய முன்னணி தோல்வியடைந்தது.

இதன் மூலம் எதிர்க்கட்சியில் இருக்க வேண்டிய நிலைமை எமக்கு ஏற்பட்டது.

இன்னும் இரண்டு வருடங்களில் நடைபெறவுள்ள சனாதிபதி தேர்தலிலும் நாங்கள் தோல்வியடைந்தால் நிலைமை மேலும் மோசமடையும்.

எனவே தான் மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கிப் பலம் வாய்ந்த கட்சியாகத் தேர் தலுக்கு முகம் கொடுக்கின்றோம்.

# குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களில் 80 வீதமானோர் இளைய தலைமுறையினர்!

## -வடமேல் மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

நாட்டில் நாளாந்தம் குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. இந்தக்குற்றச் செயல்களில், ஈடுபடுகின்றவர்களில் 80சதவீதமானோர் இளைய தலைமுறையினரே, என வட மேல் மாகாண பிரதிப்பொலிஸ்மா அதிபர் அசோக ரத்னவீர கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், பெற்றோர்கள் கட்டாயம் தமது குழந்தைகளுக்கு சமயக்கல்வி போதிக்க வேண்டும். பெற்றோர்கள் தமது குழந்தைகளின் நலனில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும்.

பெற்றோரின் கண்காணிப்பு இல்லாத குழந்தைகள் தான் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டு தாம் வாழ்கின்ற பிரதேசத்திற்கு அச்சுறுத்தலாகவும் இருந்து வருகின்றனர்.

நாட்டிலிருந்து குற்றச் செயல்களை ஒழித்துக்கட்ட இலட்சக் கணக்கில் அரசாங்கம் பணத்தை செலவிட்டு வருகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

## - இந்திய-பாக். முதல் ஒருநாள் போட்டி -

# பரபரப்பான ஆட்டம் ஒன்றில் இந்திய அணி 5 ஓட்டங்களால் வெற்றி

இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையே நேற்று முன்தினம் நடைபெற்ற பரபரப்பான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதல் போட்டியில் இந்தியா ஐந்து ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் இந்தியாவை முதலில் துடுப்பெடுத்தாடும்படி பணித்தது. இதற்கமைய இந்தியா நிர்ணயிக்கப்பட்ட ஐம்பது ஓவர்களில் ஏழு விக்கெட் இழப்பிற்கு 349 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ராகுல் ராவிட் 99ஓட்டங்களையும், வீரேந்தர் ஷெவாக் 79 ஓட்டங்களையும், சச்சின் டெண்டுல்கர் 28 ஓட்டங்களையும், மொகமட் கையூப் 46 ஓட்டங்களையும், கங்குலி 45 ஓட்டங்களையும் பெற்றனர்.

இந்தியா பாகிஸ்தானுக்கு எதிராக ஒருநாள் போட்டியில் பெற்ற ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்கையும் இதுவே ஆகும்.

இதற்கு முன்னர் 1998 இல் டாக்காவில் இந்தியா ஆறு விக்கெட்டுக்களை இழந்து 316 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதனை அடுத்து பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் ஐம்பது ஓவர்களில் 350 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடத் தொடங்கியது. ஆரம்ப துடுப்பாட்டக்காரர்களை பாக். சொற்ப ஓட்டங்களில் இழந்தாலும் பின்னர் போட்டி ஒருஇறுக்கமான நிலையை அடைந்தது.

இறுதியில் ஆறுபந்துகளுக்கு ஒன்பது ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த போதிலும் முதல் ஐந்து பந்துகளில் மூன்று ஓட்டங்களைமட்டுமே பெற்ற நிலையில் இறுதிப்பந்தில் ஆறு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற பரபரப்பான நிலையில் இந்தியாவின் வேகப்பந்து வீச்சாளர் அஸிஸ் நேராவின் பந்து வீச்சை எதிர்கொண்ட மொயின்கான் அந்தப் பந்தில் ஆட்டமிழந்தார். இதனால் ஐந்து ஓட்டங்களினால் இந்தியாவிடம் பாகிஸ்தான் தோல்வி கண்டது.

பாகிஸ்தான் சார்பாக அணித் தலைவர் இன்ஸமாம் உல்கத் 122, யூசுப்யுகானா73, யுனுஸ் கான்46, அப்துல்ரஸாக்27 ஓட்டங்களைப் பெற்றனர்.

இந்தியாவின் இந்த வெற்றியை இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய், மற்றும் காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி ஆகியோர் பாராட்டியுள்ளனர்.



# அரச மருத்துவர்களின் போராட்டம் மேலும் வலுவடையும் அபாயம்

(கொழும்பு)

அரசாங்க மருத்துவர்களின் பணிப்புறக்கணிப்பு தொடருகிறது. நேற்று முற்பகல் சுகாதார அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடந்த போதும் அது பயனளிக்கவில்லை. எனவே தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர். மருத்துவத் துறையில் காணப்படும் சம்பள முறைப்பாட்டை நீக்கக் கோரி இந்தப்போராட்டம் நடைபெறுகிறது.

இன்று முதல் களுபோவில வைத்தியசாலை வார்டுகளுக்கு நோயாளிகளை அனுமதிக்கும் செயற்பாட்டை நிறுத்தப் போவதாக மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இதேவேளை நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி இந்த சம்பள முரண்பாட்டை நீக்குவதற்காக மருத்துவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். புதிய அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டு 8 வாரங்களுள் இந்தப்பிரச்சினை தீர்க்கப்படும் எனக்கூறினார். ஆனால் மருத்துவர்கள் இதனை ஏற்கவில்லை. எனவே தொடர்ந்தும் போராட்டம் நடைபெறுகிறது. இன்று ஒரு பேச்சுவார்த்தை கே.என்.சொக்ஸியுடன் நடைபெற உள்ளது. இந்தப்பணிப் புறக்கணிப்பு டி.சொய்ஸா, மகரகம வைத்தியசாலைகளில் தவிர்ந்த இடங்களிலேயே நடைபெறுகிறது. (32)

# அரச, தனியார் ஊழியர்களுக்கு வாக்களிக்க விடுமுறை

## -தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வாக்களிக்கும் முகமாக அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் என தேர்தல் ஆணையாளர் கேட்டுள்ளார். தேர்தல் சட்டப்படி இவ் விடுமுறை உரிய முறையில் வழங்கப்படுவதை அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும், தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார். குறைந்தது ஊழியர் ஒருவருக்கு 4 மணித்தியாலமாவது தேர்தல் வாக்களிப்பிற்காக வழங்கப்பட வேண்டும் மற்றும் வேலைத தளத்தில் இருந்து வாக்களிக்கும் சாவடியின் தூரத்தையும் கருத்தில் கொண்டு இந்த நேரம் ஒதுக்கப்படலாம் எனவும் தெரிவித்தார். இதேவேளை, பொதுத் தேர்தலுக்கு வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணி முடிவடைந்துள்ளதாக அரசாங்க அச்சகத்தரப்பு கூறுகின்றது. அதே வேளை, வடமேல் மாகாண சபை வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும பணி ஆரம்பமாகியுள்ளது. அத்துடன் வாக்காளர் அட்டைகளை வாக்காளர்களுக்கு விநியோகிக்கும் பணி 24ஆம் திகதி நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (32)

# தமிழ்க்கட்சிகளின் ஏத்துழைப்பின்றி எக்கட்சியும் ஆட்சியமைக்க முடியாது

## அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு தமிழ்க் கட்சிகளின் ஒத்துழைப்பின்றி எந்த ஒரு பெரும்பான்மை இனக் கட்சியும் இந்நாட்டில் அரசாங்கம் ஒன்றை அமைக்கமுடியாது. எனவே எதிர்வரும் தேர்தலுக்கு பின்னர் ஐக்கிய தேசிய முன்னணி வடக்கு கிழக்கு தமிழ்க் கட்சிகளின் ஆதரவுடன் அரசாங்கம் ஒன்றை அமைப்பது உறுதியாகி விட்டதாக அமைச்சர் எஸ். பி. திஸாநாயக்க கூறியுள்ளார். நேற்று ஹற்றன், டிக்கோயா பிரதேசங்களில் அவர் பிரச்சாரங்களில் ஈடுபட்டார். நாட்டின் அபிவிருத்தியையும், சமாதானத்தையும் அரசாங்கம் முன்னெடுக்கத் தயாராகும் போதே சனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்து அவசர தேர்தல் நடத்துகிறார்.

ஐக்கிய தேசியக் கட்சி மக்கள் ஆணையுடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றும். நுவரேலியா மாவட்டத்தில் வெற்றி பெறும் 5 உறுப்பினர்களுடன், வெற்றி பெறும் மலையக மக்கள் முன்னணியும் தமது ஆட்சிக்கு உதவி அளிக்கும் என அமைச்சர் தெரிவித்தார். (32)

# மட்டு தேர்தல் வன்முறை ஐவர் பொலிசாரால் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்றஇரு வேறு தேர்தல் வன்முறை சம்பவங்கள் தொடர்பாக ஐவர்பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வாகனம் ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்த போதே மேற்படி ஐவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதி மன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். இதேவேளை இவர்கள் ஐவரும் கைது செய்யப்பட்டமையை கண்டித்து மட்டக்களப்பு கல்குடாவின் பல்வேறு பகுதிகளிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுள்ளன.

# ஈ.பி.டி.பி.யின் பிரச்சாரத்தை கேட்க மறுத்தவர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பி.யினரின் பிரச்சார கருத்துக்களை கேட்க மறுத்த பொது மகன் ஒருவர் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார்.

யாழ். அல்லைப்பிட்டியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த யேசுதாஸ் (வயது 30)என்பவரே பாதிக்கப்பட்டவராவார்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது, நேற்று அல்லைப்பிட்டிப் பகுதியில் இராணுவப் பாதுகாப்புடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த ஈ.பி.டி.பி.யினரின் கருத்துக்களை கேட்க மறுத்துள்ளார். இதனால் ஆத்திரம் அடைந்த ஈ.பி.டி.பி.யினர் அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். (33)

# தேர்தல் நடத்தும் அமைப்புக்களை அவமதிக்கும் வகையில் நடக்காதீர்

## தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் நிலையம் கோரிக்கை

பொதுத்தேர்தலை நடத்துவதற்கான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கும் அரசாங்க நிறுவனங்களை அவமதிக்காதீர்கள். பிரச்சாரங்களிலும் ஈடுபடாதீர்கள் என்று தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் சகல அரசியல் தலைவர்களிடமும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சுதந்திர ஊடக இயக்கம் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் அரசியல் வன்முறைகளுக்கு எதிரான கூட்டமைப்பு ஆகிய மூன்று அமைப்புக்களும் சேர்ந்து அமைத்த இந்த தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் இணை அமைப்பாளர்களான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து அனுந்தேசப்பிரிய சுனிலா அபேசேகர ஆகியோர் வெள்ளிக்கிழமை கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அதில் 2004 ஏப்ரல் 2 பொதுத் தேர்தலை நடத்துவதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கும் அரச நிறுவனங்களை மதித்துச் செயற்படுமாறும் அத்தகைய நிறுவனங்களின் செயற்பாடுகளையும் இருப்பையும் அவமதிக்கும் கூற்றையும் தெரிவிப்பதைத் தவிர்க்குமாறும் தேர்தல் பிரச்சாரங்களில சம்பந்தப்பட்ட ஏனையவர்களையும் நாம் கேட்டுக்கொள்கின்றோம் எனக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சமகாலக் கருத்தரங்குகள்

(உடையார்கட்டு)

புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறையினரால் பரவலாக சமகால அரசியல் பொதுத் தேர்தல் கருத்தரங்குகள், வீடியோப் படக்காட்சிகள் நிகழ்த்தப்பட்டு வருகின்றன.

இந்த நிகழ்வு உடையார் கட்டு-சுதந்திரபுரப் பகுதிகளில் 09,10ஆம் திகதிகளில் இரவு 8.00 மணிக்கு ஆரம்பமாகின.

சுதந்திரபுரம் மத்திய மைதான நிகழ்வு புதுக்குடியிருப்பு பிரதேச மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் சீதாராம் தலைமையிலும், சுதந்திரபுரம் கொலனி நிகழ்வானது புது.பிரதேச துணை அரசியல் துறைப்பொறுப்பாளர் நவநீதன் தலைமையிலும் இடம்பெற்றது.

நிகழ்விற்கான கருத்துரைகளை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலர் செல்வநாயகம், முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை ஊடகப்பேச்சாளர் வேதவனம், புதுக்குடியிருப்பு கோட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலர் கனகசுந்தர சுவாமி ஆகியோர் வழங்கினர். கருத்துரை வழங்கலை தொடர்ந்து இருஇடங்களிலும் "அம்மா நலமா" வீடியோ படக் காட்சியும் காண்பிக்கப்பட்டது. (19)

### வைத்தியர்கள்....

வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவு மற்றும் வைத்திய செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதனால் நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளதுடன் விடுதியில் தங்கி இருப்பவர்கள் வெளியேறி வருவதையும் காணக்கூடியதாகவுள்ளது. (33)

### மலேசியாவுக்கான....

திபதி தாம் இது தொடர்பில் ஒழுங்கு நடவடிக்கையையும் மேற்கொள்ளப் போவதாக எச்சரித்துள்ளார். (32)

### மீண்டும்....

னர் பிரதமர் திருகோணமலைக்குச் சென்று பேருந்து மையத்தின் அருகே இடம்பெற்ற பிரச்சாரக் கூட்டதில் உரையாற்றினார். சமாதான முன்னெடுப்புக்களை மீண்டும் முன்னெடுத்துச் செல்ல திருகோணமலை மக்கள் ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஆதரவளிக்க வேண்டும் என அவர் அங்கு கேட்டுக்கொண்டார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சமாதானத்தையும் இடைக்கால நிர்வாகத்தையும் ஏற்றுக்கொள்ளவில்லை. இந்த நிலையில் அது சமாதான முன்னெடுப்புக்களை எவ்வாறு முன்னெடுத்துச்செல்ல முடியுமெனவும் பிரதமர் கேள்வி எழுப்பினார். (32, 21)

### சக சிப்பாயை...

திரி வீதியில் உள்ள கோவில் வீதி சந்தி காவலரணில் கடமையில் இருந்த சிப்பாய் ஒருவருக்கும் வழமையான காவல் கடமைகளை கவனிக்கும் பிரஸ்தாப இராணுவ அதிகாரிக்கும் இடையே நீண்ட காலமாக முரண்பாடு நிலவி வந்துள்ளது.

நேற்று அதிகாலை இராணுவச் சிப்பாய் கண்காணிப்பு நடவடிகையில் ஈடுபட்டிருந்த இராணுவ அதிகாரியை சுட்டுக் கொன்று விட்டு தலைமறைவாகியுள்ளார். (33)

### 426 வன்முறைகள்...

கள் செய்துள்ளன. வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்ட காலத்தில் இருந்து இதுவரை 426 வன்முறைகள் நடைபெற்றுள்ளன.

இதில் 140 முறைப்பாட்டை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், 112 முறைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியும், 49 முறைப்பாட்டை பொதுசன ஐக்கிய முன்னணியும் செய்துள்ளன.

ஏனையவை ஏனைய கட்சிகளால் செய்யப்பட்டுள்ளன. இதில் 34 வன்முறை அநுராதபுரத்திலும், 30 வன்முறை இரத்தினபுரியிலும் 29 வன்முறை அம்பாறையிலும் நடைபெற்றுள்ளன. (32)

### கருணா....

திகதி கருணாவைச் சந்தித்துள்ளார்.

அன்று இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்ற இச் சந்திப்பின் போது, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் பாதுகாப்பு ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளும் தனது விருப்பத்தை ரட்ணகமகேயிடம் கருணா வெளியிட்டதாக சண்டேலீடர் மேலும் தெரிவிக்கிறது.

கருணாவின் இவ் விருப்பத்தை மாத்தறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மங்கள் சமரவீரவூடாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, லக்ஷ்மன் கதிர்காமர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் தற்போதைய சூழ்நிலை கருணாவின் கோரிக்கையை ஏற்கப் பொருத்தமானதல்ல என சந்திரிகாவும், கதிர்காமரும் முடிவெடுத்ததாகவும் சண்டேலீடர் மேலும் கூறுகிறது.

### ரணிலின்....

அறிவித்தனர். இது இடம்பெற்று எட்டு மாதங்களின்பின்னரே தாம் அரசாங்கத்தின் மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்றதாக கூறிய அவர்; தாமே சமாதான பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்படுவதற்கு காரணம் எனக் கூறப்படுவதை மறுத்தார்.

அரசாங்க அமைச்சர்கள் பெருமளவு ஊழல்களில் ஈடுபட்டனர். இது நாட்டை பெரும் அச்சுறுத்தல் நிலைக்கு இட்டுச் சென்றது. 2000 ஆம் ஆண்டு பொதுசன ஐக்கிய முன்னணி ஆறு வருட காலஅங்கீகாரத்தைப் பெற்று ஆட்சிக்கு வந்ததாகவும் ஆனால் 2001 ம் ஆண்டு ஐ.தே.கட்சி மிகவும் கவனமானமுறையில் தமது ஆட்சியை கவிழ்த்தது. அப போது மக்கள் ரணில்விக்கிரமசிங்க நாட்டில் நல்ல தலைவராக வரக் கூடும் என தீர்மானித்ததாக தெரிவித்த சனாதிபதி.

ஆனால் ரணில்விக்கிரமசிங்க கடந்த இரண்டு வருடமாகசெய்த செயல்கள் நாட்டைப் பாதாளத்துக்கு தள்ளி விட்டுள்ளது.

இதேவேளை தாம் ஆட்சிக்கு வந்தால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்துவதுடன் ஏனைய கட்சிகளின் கருத்துக்களையும் பெற்றுக் கொள்வேன் எனவும் தெரிவித்துள்ளார். (32)

### சனாதிபதியின்....

உரையாற்றியதாகக் கூறி ஊடகங்களுடாக சனாதிபதி இவ்வாறான கோரிக்கையை விடுப்பது தேர்தல் சட்டங்களை மீறும் செயலமாத்திரமல்லாது சம்பிரதாயத்திற்கு மாறான செயற்பாடு எனவும் சென்ரல் கப்புக்கொட்டுவ சுட்டிக்காட்டியுள்ளார்.

இச்சம்பவம் குறித்து தேர்தல் ஆணையாளரிடம் முறையிடவுள்ளதுடன் ஐக்கிய தேசியக் கட்சி என்ற ரீதியில் சில தீர்மானங்களை எடுக்கவுள்ளதாகவும் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.


## கணக்காளர் தேவை

தினமும் மாலை ஒரு மணி நேரம் கடமை புரியக்கூடிய அனுபவம் வாய்ந்த கணக்காளர் தேவை. அகவை 40-50 உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. தகுதியுடையோர் நேரில் சமூகம் தரவும்

புடைவை அழகுப்பொருள் வாணிபம்

யாழ்சாலை, கிளிநொச்சி

குறிப்பு: சம்பளம் நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்.

(சி-9274)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.